அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

- Page - 417 -

மலர் : 16 | குரோதி ஹு மார்கழி மீ | வருட சந்தா
இதழ் : 9 | டிசம்பர் 64—ஜனவரி மீ 1965 | ரூ. 3-00.

Acc. No. 9886

மதுரை வணிக மகளிர்க்கு வளையல் அணிகிறார்
சித்திர விளக்கம் 33.] சிவபெருமான். [பக்கம் 389

Acc. No. 9886

பொருள் விளக்கம்

பக்கம்

1. மமகார நாசம், நமஸ்கார சம்பத் (திருப்புகழ்மணி) ... 385
2. வளையல் விற்றது (கி. வா. ஜகந்நாதன்) ... 389
3. சண்முக கவச விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 393
4. பொது திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 399
5. அருணகிரிநாத சுவாமிகள் (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 407
6. தஞ்சாவூர் மாணிக்கம் (அனபன்) ... 411
7. தயக்கமும் மயக்கமும் (கி. வா. ஜ.) ... 416
8. கொங்கணர் (ரஸபதி) ... 419
9. Buoyancy of Spirituality (*Thiruppugal Mani*) ... 430

Grams: MURSOKS. Phone: 51388

" இறையோன் இடமாய் விளையாடுகவே
இயலவே லுடன்மா அருள்வாயே !"

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர் : D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

R011-78
1139
419

அமிர்தவசனி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ௵ மார்கழி ௴ டிசம்பர் 64—ஜனவரி 1965	இதழ் 9

மமகார நாசம், நமஸ்கார சம்பத்-

(திருப்புகழ்மணி)

அருணகிரியாருக்கு முருகனை குஹா என்று அழைப்பதில் மிகவும் விருப்பம். ஏனெனில் மயில் குஹா, குஹா என்று கத்துகிறது. குஹா என்பது ஓங்கார பீஜத்தின் சப்தம். அகர உகர மகரத்துடன் சேர்ந்தது ஓம்காரம். அக்னி பீஜத்துடன் ரகரம் சேர்ந்து முருகா என்ற சப்தமுண்டாயிற்று.

" ஆசையில் கைகலந்து சுமா சுமாபவ
சாகரத்தி லழுந்தி எழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குஹா ! குஹா என
வகைவராதோ "

என்று அருணகிரியார் கதறுகிறார்.

இவ்வுலகில் வாழ்கின்ற எல்லவரும் நல்லவரே !
இவ்விதமே யானெண்ண, எந்தாய் அருளுதியே.

உலகத்தில் பலவித சுவைகளுண்டு. அவற்றில் எந்தச் சுவையை அதிகமாய் விரும்பினாலும், அதனால் உண்டாவது துன்பமே.

சிறு குழந்தைகளிடம் பணத்தைக் கொடுத்தால் அது மிட்டாய் கடையிலிருக்கும் பக்ஷணங்களை யெல்லாம் வாங்கித் தின்று வியாதியை வரவழைத்துக் கொள்ளும். அதுபோல, விவரம் தெரியாத மனிதன் உலகத்தில் அது வேண்டும், இது வேண்டும் என்று ஆசைப்பட்டு துன்பத்தை விலைக்கு வாங்கிக் கொள்கிறான். ஆசையினால் வருவது துன்பமே. சிற்சிலருக்கு இன்பம் வருவதும் துன்பத்தை நன்றாக அனுபவிப்பதற்காகத்தான்.

இன்பத்தை நன்றாய் அனுபவிக்கலாம். ஆனால் அதன் மூலமாக மயங்காமல் வினையை ஏமாற்ற வேண்டும். அனுபவம் கெடுதலல்ல. அனுபவித்த பிறகு சென்ற அனுபவத்தை மறுபடியும் வேண்டுமென்று ஆசைப் படுவதால்தான் துன்பமுண்டாகிறது.

"இன்பமோ, துன்பமோ எது வேண்டுமானாலும் வரட்டும். இவை இரண்டிற்கும் மேலான பொருளாகிய முருகனிருக்கையில் இவை என்னைப் பாதிக்காது" என்றிருக்க வேண்டும். மகா சக்தியாகிய வேலைக் கையில் பிடித்த முருகனை நினைத்து வினையை ஏமாற்றி விடலாம். இன்ப துன்பமாகிய பவசாகரத்தில் அழுந்தலாகாது.

மண்ணுள் வயிரம் மறைந்திருத்தல் போல்,நல்லோர்
எண்ணுள் சிவசிவஎன்(று) ஏத்தியிருக் கின்றாரே.

காதல் என்பது உயிரைப் பொருத்ததேயன்றி உடலைப் பொருத்ததல்ல. "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே யின்பம்" என்றார் ஔவையார். இருவர் கருத்தும் முருகனிடம் காதலால் ஒருமித்திருக்க வேண்டும்.

உலக வாழ்க்கையில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும். இதுவே இல்லறமாகும். ஞானசம்பந்தரும் குலசேகராழ்வாரும், தெய்வ பக்தியையே காதல் என்றனர்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமசி வாயவே.

என்றார் ஞானசம்பந்தர்.

"தூராத மனக்காதல் தொண்டர் குழாம்" என்றார் குலசேகராழ்வார். பகவானுடைய நினைவு உள்ளத்திலிருந்தால் எதை வேண்டினாலும் கிடைக்கும்.

கணவன் மனைவி இருவர் மனமும் ஒருமித்திருப்பது இன்பந்தான். ஆனால், அதைவிட சிறந்த பேரின்பம் தருவது ஆண்டவனை அனுபவிப்பதுதான்.

ஆண்டவன் எல்லா ஜீவராசிகளின் உள்ளத்திலுமிருக்கிறான். ஆனால், அவனிருப்பது உணர்ச்சியில் தெரிவதில்லை. உணர்ச்சிக்கும் மேற்பட்டவன் பகவான். அவன் கருணை கூர்ந்து அனுக்ரஹித்தால்

பட்டாடை யில்லை, பணியில்லை ஆனாலும்,
கட்டழகுத் தாய்மார், தம் கற்பைக்காக் கின்றாரே.

தான் உணர்ச்சியினால் அவனிருப்பதை உணர முடியும். பஜனை செய்தால் அவனருள் உண்டாகும்.'' என் பக்தர்கள் எங்குப் பாடுகிறார்களோ அங்கு நானிருக்கிறேன் என்றான் கிருஷ்ணன். ஆனால், நான் என்ற அகங்காரத்தை அடியோடொழிக்க வேண்டும்.

முருகா! நான் ஒருவனிருக்கிறேனென்பது உனக்குத் தெரியவில்லையா? இவைகளெல்லாம் என்னுடையன. இவைகளை ஏற்றுக்கொள் என்றால், நீ அகங்காரப் பிண்டம். உனக்கே இடமில்லையே, என்னை ஏன் கூப்பிடுகிறாய் என்று போய் விடுவான்.

மனதிலுள்ள, அகங்கார மமகாரங்களாகிய குப்பைகளைப் போக்கி, உள்ளத்தைத் தூய்மையாக வைத்து அவனைக் கூப்பிட்டால் அவன் வருவான்.

முருகா! நீ வரவேண்டுமென்ற ஆசையால் மமகாரத்தைப் போக்கி விட்டேன். இனி மமகாரத்திற்கு இடமில்லை. நமஸ்காரம்தான் இருக்கிறது என்கிறான் பக்தன். உடம்பைக் கீழே தள்ளுவதன் மூலமாக, நான் எனது என்பதைக் கீழே தள்ளி விடுவதே நமஸ்காரத்தின் கருத்து. இதைத் தெரிந்து நமஸ்காரம் செய்ய வேண்டும்.

இப்பொழுது நமஸ்காரத்தின் கருத்து விளங்கி விட்டது. இனி முருகனிடம் போவோம். ஆறெழுத்தாகிய "சரவணபவா'' என்ற நாமத்தை நினைத்து

மகிழ்சசி மருநதிற்கும் இல்லாத செல்வர்,
இகழ்ச்சியகன்று, இனிமையுறல் என்றேயோ?

குஹா! குஹாவென்று சொல்லுவோம். இந்த குஹ நாமத்தில் அருணகிரியாருக்கு மட்டும் விருப்பமென்பு தில்லை.

ஆதி சங்கரருக்குக் கூட பிரேமையுண்டு. அவர் தாம் பாடிய புஜங்கத்தில் குஹ நாமத்தை அடிக்கடி பிரயோகித்திருக்கிறார். குஹாய நம ஓம், குஹாய நம ஓம், சிவசரவணபவ குஹாய நம ஓம் என்று பாடினல் உள்ளக் குகைஹயி லிருக்கும் குஹன் ஏனென்று கேட்பான். அவனுடன் கலந்து பேரின்ப மடையலாம். (தொடரும்)

சித்திர விளக்கம்—33

வளையல் விற்றது

[கி. வா. ஜகந்நாதன்.]

முன்பு ஒரு கால் தாருகாவனத்து முனிவர்கள் இறைவ னிடம் பக்தியினறித் தாம் செய்யும் கர்மங்களே தம்மைக் காப்பாற்றும் என்ற செருக்கோடு இருந்தார்கள். எத்தனை கர்மங்களைச் செய்தாலும் இறைவனை எண்ணி அவற்றின் பயனை அவனுக்கு அர்ப்பணம் செய்து வாழாவிட்டால் மனம் தூய்மை அடையாது. இதனை அறியாத முனிவர்கள் இறை வனை எண்ணுமல் வாழ்ந்தனர். அவர்கள் மனம் அவர்களுக்கு அடங்காதது என்பதையும், சோதனை வந்தால் மனத்தை அடக் கும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை யென்பதையும் காட்டும் பொருட்டு இறைவன் ஒரு திருவிளையாடலை நிகழ்த்தினன். திருமாலை மோகினியாக வரச் செய்தான். மோகினியின் வடிவு

இனபங்கிலை பிள்ளைகளால் எய்துமெனல் மாறி, அவர்
துன்பங்கிலை, உலகைத் துளைப்பதுவும் என்னேயோ?

அழிலில் மயங்கிய முனிவர்கள் தம் மனத்தை நிறுத்த இயலா மல் மயல் உழந்து வருந்தினார்கள்.

இறைவன் பிட்சாடனக் கோலம் புனைந்து பேரழகு பொங்க எழுந்தருளினான். அவனுக்குப் பிட்சையிட வந்த தாருகா வனத்து முனிவருடைய பத்தினிமார் தம்முடைய மனத் திண்மை குலைந்து மால்பூண்டு தடுமாறினர். அவனுக்கு ஐயம் இடும்போது நிறைகுலைய, கையில் உள்ள வளைகள் கழல, இடையிலுள்ள உடை கழல, நெஞ்சில் நின்ற நாணம் கழல நின்றார்கள். அவனை அணுகி மோக லாகிரியில் மூழ்கிக் காம உணர்ச்சி ததும்பும் மொழிகளைக் கூறித் தொடர்ந்தனர். மறைக்கும் எட்டாமல் நிற்கும் பெருமான் அவர்கள் எட்ட எண்ணிக் குறுகும் போதெல்லாம் எட்ட மாட்டாமல் நின்றான். இப்படிப் போக்குக் காட்டிச் சென்ற ஐயனிடம் அம்மங்கையர், "உம்மைக் கண்டு மயங்கி ஆடையை இழந்தோம்; அவற்றை மீட்டும் எம் அரையில் உடுத்தும். எம் கையில் உள்ள வளைகள் கழன்றன; அவற்றை எடுத்து மீட்டும் எம் கைகளில் இட்டு விட்டுச் செல்லும்" என்று கூறினார்கள். இறைவன், பிறகு ஒருநாள் வளைகளை இடுவோம்" என்று மொழிந்து போய் விட்டான்.

தம் மனைவிமார் நிறையும் நாணும் இழந்த செய்தியை அறிந்த தாருகா வனத்து முனிவர்கள், "நீங்கள் நாணம் குலைந்து கருத்துத் திரிந்தீர்கள். ஆதலால் மதுரையில் வணிகர் குலத்துப் பெண்களாகப் பிறப்பீர்களாக!" என்று சாபம் இட்டார்கள். அது கேட்டு அஞ்சிக் குலைந்த அவர்களுடைய தேவிமார், இந்தச் சாபம் தீர்வது எப்போது!" என்று கேட்டார்கள். "அங்கே எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான், உங்கள் கரங்

ஏழைகள் ஆனாலும், இன்ப அமைதியரேல்,
ஊழை யழிக்கும் உறுதியினர் ஆவாரே.

களைத் தீண்டியருள்வான்; அப்போது சாபம் நீங்கிப் பண்டை நிலையை அடைவீர்கள்" என்று முனிவர்கள் கூறினார்கள்.

அவர்கள் இட்ட சாபத்தின்படியே அந்த மடந்தையர் மதுரைமா நகரிலுள்ள வணிகர்களின் புதல்வியராகப் பிறந்து வளர்ந்தனர். அவர்களுக்கு மங்கைப் பருவம் வந்து எய்தியது. அப்போது ஆலவாயில் எழுந்தருளி யிருக்கும் சுந்தரேசப் பெருமான் ஒரு வளைச் செட்டியின் கோலத்தைப் பூண்டு வந்தான். திருமுடியில் புனைந்த கங்கை முதலியவற்றை மறைத்து, நெற்றிக் கண்ணை மறைத்து, ஒரு பாகத்தில் உள்ள மங்கையையும் மறைத்து, வளைவிற்கும் வணிகரைப் போல வேடம் புனைந்து, திருவடியை நில மாமகள் சூடும்படி நடந்து வந்தான்,—'பழைய காலத்தில் முனிவர் மனைவியர் அளித்த வளைகளையே மீட்டும் பட்டுவடம் கொண்டு தொடுத்துக் கொணர்ந்து மறுபடியும் அவர்களுக்கே இடுவோம்' என்று திருவுள்ளங் கொண்டவனைப் போலத் தோற்றம் அளித்தான். அவன் தோளில் தொண்டர்கள தொடுத்த வண்ண மாலை களைப் போல வளையல்கள் பல நிறங்களுடன் இருந்தன. வேதத்தை அருளிய திருவாய் திறந்து, "வளையோ வளை!" என்று கூறியபடியே எம்பெருமான வணிகர் வீதிவழியே சென்றான். அவனுடைய இனிய குரலைக் கேட்டு, மேகத்தின் முழக்கத்தைக் கேட்ட மயிற் கூட்டத்தைப் போல வணிக மகளிர் தம் மாளிகையிலிருந்து புறப்பட்டு வெளியிலே வந்தார்கள்.

வளை வாணிகனுடைய அழகிய வடிவத்தைக் கண்டு அவர்கள் உளளம் தடுமாறின. தம்தம் கரங்களை நீட்டி வளையலை அணியும்படி ஆர்வத்தோடு முந்தினர். இறைவன்

தற்பர! நின தாளேத்தும் தம்மாட்சித் தம்பதிகள்,
சிற்பரநின் வாழ்விற் செம்மாத்தல் கண்டோமே!

அவர்களுக்கு வளையலை அணிந்தபோது அம்மகளிருக்குப் பின்னும் பின்னும் அவனுடைய கையால் தீண்டப் பெற வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அதனால் அவன் இட்ட வளைகளை உடைத்து எறிந்து விட்டு மறுபடியும் வந்து, தம் கரத்தை நீட்டி வளை போடச் சொல்வார்கள். எனக்கு, எனக்கு என்று ஒருவரை ஒருவர் முந்தினர். நாணம் கழன்று வளை வாணிகனைத் தொடர்ந்தனர். முன்னே இட்ட வளைகள் விரக தாபத்தால் கழன்று விழும். பின்னும் குறுகிய வளையல் இடச் சொல்வார்கள். மறுபடியும் அவை கழல மீட்டும் கையை நீட்டுவார்கள். "செட்டியாரே, இந்த வளைகள் எங்கே கிடைத்தன உமக்கு? இவற்றைப் போல நாங்கள் இதற்கு முன் கண்டதே இல்லை. எம்முடைய உடம்பெல்லாம் புளகம் போர்க்கும்படி செய்கின்றனவே" என்றார்கள்.

"நாளைக்கும் வந்து வளை போடுங்கள் என்றார்கள்."

"இந்தாருங்கள், வளையின் விலை; இதை வாங்கிக் கொண்டு போங்கள்" என்று கெஞ்சிக் கூறினார்கள்.

"எல்லாம் பின்பு வாங்கிக் கொள்கிறோம்" என்று சொல்லிவிட்டுப் போனான் வளை வணிகன். அப்படிப் போனவன் உடனே மறைய, பிறகு விண்ணிழி விமானத்துள் இருக்கும் திருவுருவத்தோடு தோன்றினான். அதனைக் கண்ட யாவரும் ஆலவாய் இறைவனே வளைச் செட்டியாக வந்தான் என்பதை உணர்ந்து வியந்து போற்றிப் புகழ்ந்தார்கள்.

இறைவன் திருக்கரத்தால் தீண்டப் பெற்ற வணிக குலக் கன்னியர்கள் கருவுற்று நன் மைந்தரைப் பெற்று வாழ்ந்து இறைவன் அருளில் ஒன்றினர்.

அகதிகளுக்(கு) உண்டி அளித்தபினர், அன்பால்
மிகுதியினை உண்ணும் மேலோர்கள் நல்லோரே.

ஓம் குஹேசாய நமஃ

சண்முக கவச விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

ஆறுபிரிவுகள் :

முப்பது பாட்டுக்களால் ஆகிய இம் மந்திர மறை, இதில் கூறப்படும் பொருள் முறைக்கேற்ப ஆறு பிரிவுகளில் அடங்கும். அவையாவன :—

1. 'அ' முதல் 'ஐ' வரையிலுள்ள (1—9) பாடல்கள் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் உள்ள உறுப்புகளைக் காக்க வேண்டல்.

2. 'ஒ' முதல் 'ஔ' வரையில் (10—13) ஆகிய மூன்றும் பில்லி, சூனியம், பேய், பகை நீக்கப் பிரார்த்தனை.

3. 'க' முதல் 'ச' வரையிலுள்ளவை (13—15) உயிரினங்களா லுண்டாகும் உறுதுயரகற்ற விழைதல்.

4. 'ஞ' முதல் 'ந' வரையில் (16—20) ஐந்தும் உடற் பிணி ஒழிக்க விண்ணப்பித்தல்.

5. 'ப' (2)—என்ற ஒரே பாடல் எமபய நீக்க இரத்தல்.

6. 'ம' முதல் 'ன' வரையில் (22—30) ஒன்பதும் எவ்விடத்தும், எவ்வேளையிலும் எப்பருவத்திலும் இடையுறாது காக்க இறைஞ்சுதல் என்பனவாம்.

தளர்நடைநாள் தொட்டு தகவுநெறி கற்று,
வளர்மதிபோல் ஞான வழிநிற்பார் வாழியவே.

1, அண்டமாய் அவனியாகி அறியொணுப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகளறு தெய்வமாகி
எண்திசை போற்றநின்ற என்னருள் ஈசன்ஆன
திண்திறல் சரவணத்தான தினமும்என் சிரஸைக் காக்க.

அருஞ்சொல்,

அண்டம் - விண்; அவனி - மண்; துகள் - குற்றம்; திறல் - அளவிலாற்றல்.

விளக்கம்,

விண்ணுகியும் மண்ணுகியும் (அபர ஞானத்தால்) அறிய முடியாத நுண்பொருளாகியும், அடியவர்க்கு குருவும், மாசறுக்கும் தெய்வமணி யாகவும், எட்டுத் திசையுள்ள வரும் ஏத்த நின்றவனும், அருளே (மிகுந்த) எம்மீசனும் ஆன ஆறெழுத்தண்ணல் (சரவணபவன்) அநுதினமும் அடியேன தலையைக் காத்தருளுவாஞக.

விசேடம் :

இந்நூல் உடலுக்கும் உயிருக்கும் காவலே வேண்டும் கவசம். நமக்கு வரும் அல்லல் எல்லாம் மேலே விண்ணும், கீழே மண்ணும் ஆகிய இரண்டிற்கும் இடையில் தான் நேரும். அதனல் விண்ணுகி மண்ணுகி அங்கிங்கென்ணுதபடி எங்கும் துன்றி நிறைநத இறைவனே நம்மைக் காக்க இயலும், அதனல் தான் ' அண்டமாய் அவனியாகி ' ஆண்டவனுள்ளான். ஐம பெரும பூதங்களில் (மண், நீர், தீ, காற்று, விண்) மிகவும் மேலிருக்கும் விண் (ஆகாயததையும்) மிகவும் கீழிருக்கும் அவனி (பூமி)யையும் கூறவே ஐம்பூதஙகளுமாகவும் பெருமான் உள்ளான எனறபடி.

திருமகள்போல், பெண்மைத் திலகமென வாழ
வருமகளிர் தாள்பற்றி வாழுநெறி கற்போமே !

" வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் "
—(திருவாசகம்.)

" மங்கு லின்புறு வானாய் வானூ(டு)
அன்றரும்பிய காலாய் நீள்கால்
மண்டுறும் புகை நீறாய் வீறாய் —எரிதீயாய்
வந்திரைந் தெழு நீராய் நீர்சூழ்
அம்பரம் புனை பாராய் பாரேழ்
மண்தலம் புகழ் நீயாய் நானாய்

* * * * *

அண்ட பந்திகள் தாமாய் " —(திருப்புகழ்.)

" விண்ணே விண்ணாதியாம் பூதமே ". —(தாயுமானார்.)

இதனால் சண்முகப் பரமனது சர்வ வியாபக நிலை (எங்கும் நிறைந்த தன்மை. Omni presence) கூறப்பட்டது.

அறியொணாப் பொருள் :

நிறைந்த பொருளாகக் கடவுள் இருந்தால் அவனை எல்லோரும் அறிய முடிய வில்லையே? எனில் அவன் " தத்துவ முணர்ந்த மெய்யான ஞானக்கண் கொண்டே அன்றி நாடரும் " பொருள். நூலறிவும் சடதத்துவ ஆராய்ச்சி அறிவுமான பசு ஞானத்தில் (ஆன்ம அறிவுக்கு) எட்ட முடியாதவன்.

" சோதனையுள் அகப்படாச சோதி ".

பொருளதாகி :

குருட்டுக் கண்ணுக்குச் சூரியன் தெரியா விட்டாலும் சூரியன் இல்லை எனச் சொல்ல முடியுமா ? முடியாது. அது போல அஞ்ஞானிகள் அறிய முடியவில்லை என்றால அவன் அவர்களுக்கு ஞானிகளைப் போல காண முடியாது. அவ்வளவு நுண் பொருளாக உள்ளான் என்றே கொள்ள வேண்டும்.

ஆடையில சாயம் அமைவதுபோல், நல்இளமை
வாடையில் பக்தி வளரவழி செய்வோமே !

"வேதங்கள் ஐயா என ஓங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"

என்பது எட்டாந் திருமுறை. பொருள் என்ற தமிழ்ச் சொல் வடமொழியில் வஸ்து எனப்படும். வஸ்து என்றால் என்று அழியாத உண்மைப் பொருள். இது சிறப்பாகக் கடவுளையே உணர்த்துவதாம். நாம் பேசும் உண்மையான சொற்களும் அழிவதில்லை. ஆகவே 'வாஸ்தவமாய்ச் சொல்கிறேன்' என்பது உலக வழக்கில் கேட்கலாம். வஸ்து சம்பந்தமுடையது வாஸ்தவம். ஆன்ம அறிவுக்கு அறிய முடியா விட்டாலும், அழியாது என்றுமுள்ள பொருள் என்று வஸ்து நிச்சயம் செய்ததுமாம்.

தொண்டர்கள் குரு :

முதலடியில் குமார பிரானது சொரூப நிலையில் கருத்துப் பொருளாகப் பேசியவர், அப்பெருமானது தடத்த நிலை - உருவு கொண்டருளும் நிலையில் காட்சிப் பொருளாய்க் குருவாகிறான் என்கிறார். யாருக்குக் குருவாக வருகிறான் எனில், தொண்டர்களுக்கே. தொண்டர் யார்? தொண்டு செய்யும் அடியவர்கள். மனத்தால் தியானித்தும், வாயார வாழ்த்தியும், தலையாரக் கும்பிட்டும் ஆண்டவனுக்கும் ஆருயிர்கட்கும் ஒல்லும் வகையால் தொண்டு செய்பவரே தொண்டராவார்.

"பாடலும் தொண்டே பழிச்சலும் தொண்டே
ஆடலும் தொண்டே அருநறும் பண்டம்
ஈதலும் தொண்டே இறைஞ்சலும் தொண்டே"
—(கந்தகோட்ட மும்மணிக்கோவை).

இவ்வித தொண்டினால் பக்குவநிலை எய்தப்பெறும் ஆன்மாக்களுடைய தவ முதிர்ச்சியால் ஆண்டவனே குருவாய் வருகிறான். அருள் புரிகிறான்.

பத்தி முறுகிப் பணிசெய்வார் வாழ்வுயரும் ;
சித்தம் சிவமாகும் ; சிறப்புறுவர் திண்ணமிதே.

" ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே "
—(சிவஞானபோதம் 8-ம் சூத்திரம்)

' குருவருளின்றி அருள் வரலின்றே '
—(ஞான வாக்கியம்)

குரு :

கு—குணமும், ரு—உருவமும் (கோலமும்) உடையவன் குரு.

" கோலஞ் சிறந்தபடியே நல்
குணமும் சிறந்த கொள்கையராய் "
—(சிதம்பர சுவாமிகள்)

துகள் அறுதெய்வம் :

நமது மாசுகளை அறுக்கும் மயிலோன் எனலே சிறப்பு. புனிதமாய் இருக்கும் பெருமானை மாசுகள் படிவதில்லை. அவன் குற்றம் (வினையில்) நீங்கியவன் எனில் முன்னர் வினையி லிருந்து பின் நீங்கினுன் எனல் வேண்டும். இது பெரும் அபசாரம். ஆதலின் அமலனுகிய அண்ணல் அடியார் துகளை அறுத்தான் எனலே பொருத்தம்.

எண்திசை.........ஈசன் :

திக்கது மதிக்கவரு குக்குட முடையோன், இகபர சவுபாக்கியமான சகல ஐஸ்வரியத்தையும் உதவுவோன் ஆதலின், ஈசன் என அறிக.

திண்திறல் : அளவிலாற்றல்.

* மலை மருவுபைம் புனத்தி வளருமிரு குன்றமொத்தி பிறவியலை தாண்டிப் பிழைக்குநெறி உண்டாகும் ; திறமாரக் கற்றுத் திடங்கொண்ட நெஞ்சர்க்கே.

வலிகுடி புகுந்திருக்கு மார்பினன்
மலையிறை மடந்தை பெற்ற ஒரு மதலை
என்றுதித்து மலையிடியவுந் துணித்த தோளினன்
(திருவகுப்பு).

என்பதால் பெம்மான் முருகனின் பேராற்றல் புலனும்.

சரவணத்தான் :

முதற் பாட்டில் திருவாறெழுத்து பயின்றிருப்பது பாம்பனடிகள் சண்முக கவச பாராயணஞ் செய்யும் அன்பர்களுக்குப் பரம கருணையால் உபதேசித்தருளுகின்ற உன்னத குறிப்பு என்க. சுவாமிகளை நேரே தரிசிக்கும் பேறு வாய்க்கப்பெறுதவர்க்குக் கூட இப்பாடல் வாயிலாக உபதேசிக்கும் உண்மை ஊன்றி நோக்குவார்க்கே உணர முடியும். இம் மந்திரத்தை 30-வது பாடலில் வைத்துள்ளார். விளக்கம் அங்குக் காண்போம்.

சிரசைக் காக்க :

"எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானம்" ஆகலின் தலை முதலில் கூறப்பட்டது.

குமர பிரானைக் கும்பிட வணங்கும் தலையினை எவர்க்கும் எம் மந்திரங்கட்கும் தலையாய ஆறெழுத் தாண்டவன் காத்தருளுக என்று விண்ணப்பிக்கும் அழகினை என்னென்று வியப்பது ? (தொடரும்)

சம்சாரம் சாகரமாம் என்பரது பொய்யாகும் ;
இம்சையிலா வாழ்வில், இணைந்திருக்கும் ஞானிகட்கே.

பொது

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

வேடர்செ ழுந்தினை காத்திதண் மீதிலி ருந்தபி ராட்டிவி
லோசன அம்புக ளாற்செயல் தடுமாறி
மேனித ளர்ந்துரு காப்பரி தாபமு டன்புன மேற்றிரு
வேளைபு குந்தப ராக்ரம மதுபாடி
நாடறி யும்படி கூப்பிடு நாவலர் தங்களை யார்ப்பதி
னாலுல கங்களு மேத்திய இருதாளில்
நாறுக டம்பணி யாப்பரி வோடுபு ரந்தப ராக்ரம
நாடவ ருந்தவம் வாய்ப்பது மொருநாளே;
ஆடக மந்தர நீர்க்கசை யாமலு ரம்பெற நாட்டிவொ
ராயிர வெம்பகு வாய்ப்பணி கயிறுக
ஆழிக டைந்தமு தாக்கிய நேகர்பெ ரும்பசி தீர்த்தரு
ளாயனு மன்றெயில் தீப்பட அதிபார
வாரைநெ டுங்கிரி கோட்டிய வீரனு மெம்பர மாற்றிய
வாழ்வென வஞ்சக ராக்ஷதர் குலமான
வாசவன் வன்சிறை மீட்டவ னூருமடங்கலு மீட்டவன்
வானுல குங்குடி யேற்றிய பெருமானே;

(பதவுரை.) (ஆடக மந்தர................பெருமானே!)

ஆடக மந்தரம் நீர்க்கு அசையாமல் உரம் பெற நாட்டி -(மாபெரும்) பொன்னிறமான மந்தர மலை, (ஆழ் கடல்) நீரில் அசையாதபடி, வலிமை பெற அழுந்த வைத்து;

[நீர்க்கு - நீரில்; உருபு மயக்கம்.]

ஓதியுணர்ந(்து) ஓம்பொருளை, ஒவ்வொருநா ளுங்கற்கும் சாதகர்கள். சாதலிலர்; சகமாகி நின்றாரே.

ஓர் ஆயிரம் வெம் பகுவாய் பணி கயிறு ஆக - பயங்கர மாகப் பிளந்த ஓராயிரம் வாய்களை யுடைய (வாசுகி யெனும்) பாம்பைக் கடை கயிறாகப் பற்றி ;

[வெம் - உக்கிரம். பகு - பிளந்த. பணம் - பணத்தை யுடையது ; பணம் - படம் ; இனையாகு பெயராய்ப் பாம்பை உணர்த்திய பெயர்.]

ஆழி கடைந்து அமுது ஆக்கி - (தூய) கடலைக் கடைந்து அமுதத்தைத் தோற்றுவித்து ;

அநேகர் பெரும்பசி தீர்த்தருள் ஆயனும் - அளவிலாத (விண்ணவருடைய மண்ணவருடைய கொடும் பசியைத் தீர்த் தருளிய கோபாலனும் ;

[ஆ - பசு; ய - எழுத்துப் பேறு ; ஆயன் - பசு பரிபாலனன்.]

அன்று எயில் தீப்பட, அதி பார வாடை நெடும் கிரி கோட்டிய வீரனும் - அந் நாளில், (முப்புர) மதில்கள் (மூன்றும்) பொரிந்து கரிந்து போமாறு, அதிக பாரம் உடை யதும், வட திசையில் இருப்பதுமான பெரிய (வானளாவிய மேரு) மலையை (வில்லாக) வளைத்த வீரரான உருத்திரரும் ;

[எயில் - மதில். வாடை - வடதிசை. கோட்டிய - வளைத்த.]

எம் பரம் ஆற்றிய வாழ்வு என - எமது (பொறுப்பின்) பளுவைக் குறைத்த வாழ்வின் சொருபமே என வாழ்த்தி நிற்ப ;

[பரம் - சுமை. ஆற்றிய - தணித்த. வாழ்வு - வினி ; இயல்பா கின்றது.]

வஞ்சக ராக்ஷதர் குலம் மாள - அரக்கரான வஞ்சகர் கூட்டம் அழியவும் ;

வாசவன் வன்சிறை மீட்டு - இந்திரனை (வேதனை)க் கொடும் சிறையில் இருந்து விடுவித்து ;

ஆசையாம் ஆபாசம், அல்லல் விளைக்குமென
நேசமுளார் சிந்தித்து நீங்கியிருக் கின்றனரே.

அவன் ஊரும் அடங்கலும் மீட்டு - (கொள்ளை போன) அவனது ஊரான அமராவதியையும், (பிற செல்வங்கள்) அனைத்தையும் மீட்டு ;

அவன் வான் உலகும் குடி ஏற்றிய பெருமாளே - அவனது (எரிந்து கரிந்த) விண்ணுலகையும், நின்று என்றும் நிலவுமாறு உயர்த்திய பெருமையில் சிறந்த இறையவனே !

(வேடர் செழும் தினை..............ஒரு நாளே !)

வேடர் செழும் தினை காத்து - வேடர்களுடைய கவின் மிகுந்த தினைப்புனத்தைக் காவல் செய்து ;

இதண் மேல் இருந்த பிராட்டி விலோசன அம்புகளால் செயல் தடுமாறி பரண்மேல் இருந்த வள்ளியார் கண்களாம் அம்புகளால் கலக்கம் அடைந்து ;

[இதண் - பரணைசாலை. விலோசனம் - கண்.]

மேனி தளர்ந்து உருகா - திருமேனி தளர்ந்து (உள்ளம்) உருகி ; பரிதாபமுடன் - பரிதபிக்கத் தகுந்த நிலையில் ;

புனமேல் திருவேளை புகுந்த பராக்ரமம் அது பாடி - (தினைப்) புனத்தில் (பரிபக்குவம் எய்திய) காலம் பார்த்து கடிது புகுந்த (உமது புனித) வல்லாண்மையைப் புகழ்ந்து பாடி ;

[திருவேளை - சிறந்த சோம் ; "குறததி திருவேளைக்காரனே" என்பது திருவகுப்பு. பராக்கிரமம் அது என்பதில், அது - பகுதிப் பொருள் விகுதி.]

நாடு அறியும்படி கூப்பிடு நாவலர் தங்களை - உலகர் அறியுமாறு ஒலிட்டு அழைக்கும (புனித) நாவல்ல புலவர்களை ;

ஆர் பதினாலு உலகங்களும் ஏததிய நாலு கடம்பு அணியா இரு தாளில - நிறைவுடைய (தூய) பதினான்கு உலகத்தவரும் துதிக்கின்ற நறுமணம் கமழும் (இனிய) கடப்பமலர் மாலை அணிந்துள இரு திருவடிகளில ;

தூயவர் போற்றித துதிக்கின்ற மெய்ப்பொருளில்,
காயம் அணு அணுவாக் கட்டறுத்து நிற்போமே!

பரிவொடு புரந்த பராக்ரமம் நாட—அன்பொடு (அணைத்துக்) காத்தருளும் உயர்ந்த ஆற்றலை ஊன்றி உணர ;

அருந்தவம் வாய்ப்பதும் ஒரு நாளே - அரிய தவப்பேறு கைவல்யம் ஆகும் அந்நாளும் எந்நாளோ, (எ - று)-

விரிவுரை.

ஒரு காலத்தில் எங்கும் அசுர ஆட்சி எழுந்தது. அதனால் வேள்விகள் அடங்கின. இமையவர், அவிசை இழந்தனர். பசியோ பெரிதும் பாதித்தது. குளிர்ந்த மேனி குமைந்தது. உடலின் ஒளியும் ஒழிந்தது. விண்ணவர் பரிபவ விளைவு இது.

தேவர் சகாயம் இல்லாமையால், வானம் பெயலை மறந்தது. திரளும் பயிர்கள் தீய்ந்தன. பசுமைப் புற்கள் கரிந்தன. உணவின்றிப பசுக்கள் உயங்கின. கண்ணீர் சிந்தின. கலங்கி நின்றன. மண்ணவர் அமுதை மறந்தனர். கடல்நிற வண்ணா ! கோபாலா என்று கதறினர்.

காப்புக் கடவுளான திருமால், அறிதுயில் நீங்கினார். கதறலை உணர்ந்தார். கடமையை நினைந்தார். எழுந்த மந்தர மலையை எடுத்தார். எதிரில் இருநத பாற்கடலில இட்டார். அதை ஆடாது அசையாதபடி அழுத்தினார். ஆயிரம் வாய்ப பாம்பை, கடைகயிறு ஆக்கினார். கடலைக் கடைந்தார். தெளிந்த அமுதம் திரண்டது. அசுரரை ஏய்ததார். அதை அமரர்க்கு அளித்தார். அதிர்த்த கொடும்பசி அடங்கியது. உம்பர் உலகம் உய்ந்தது. அவ்வளவுதானா !

ஆதி மாதவர், அருளார் கண்ணனாக அவனியில் உதித்தார். புனித ஆயர் குடியில் புகுந்தார். இன்பக் குழலை யிசைத்தார். அந்த இனிய ஒலியால், தளர்ந்த பயிர்கள் தழைத்தன. எங்கும் பசுமை எழுந்தது. மேதகு பசுக்கள்

உள்ளத்தில் அனபு உருவான அப்போதே,
கள்ளமகல் தெய்வக் கருவூறல் காண்போமே.

மேய்ந்தன. உம்பர்கள் உலகம் உவந்தது. அதன் பயனாக, பெருகிக் காலமழை பெய்தது. சிறக்க விளைவுகள் செழித்தன. பசிதவிர்ந்து, மானுட மக்கள் மகிழ்ந்தனர். படியளக்கும் பரந்தாமர், இசசெயல்களால், பசிதவிர்த்த பெருமாள் ஆயினார்.

மற்றொரு சமயம், விஞ்ஞானத்தை அசுரர்கள் விருத்தி செய்தனர். மெய்ஞ்ஞானத்தை மறந்தனர். அறிவால் எதையும் ஆளலாம் என்று அகங்கரித்தனர். பறக்கும் நகர்களைப் படைத்தனர். எண்ணியபோது அவைகள் எங்கும் ஏறி இறங்கின. அதன் கீழ் இருந்தவர் அதிர்ந்து நசுங்கி அழிந்தனர். விண்ணில் இந்த விளைவு. மண்ணில் கோர மல்லாட்டம். பாதலமோ பெரிதும் பழுதடைந்தது. இச் சூழ்நிலையால், இயங்க இயலாமல், கோள்கள் எங்கும் குமுறின. நாள்மீன்கள் வருந்தி நைந்தன. இயற்கை சிதைந்தது. செயற்கை சிரித்தது. எங்குமே இருள் எழுந்தது. எவரும் துன்பம் எய்தினர்.

அறிவின் முயல்வில் விஞ்ஞானம். அருளின் செயலில் மெய்ஞ்ஞானம். அசுராவேச விஞ்ஞானத்தால், அமைதி குலைந்தது. ஆக்ரமிப்பு, கோர தாண்டவம் செய்து கொக்கரித்தது. அசுர விஷப் பூசசிகளை அழித்து, உயிர்களின் அயர்வை அகற்றும் உருத்திரர், இதை உணர்ந்தார். செயல்பட எழுந்தார். மேருவை எடுத்தார். வில்லாக வளைத்தார். பூமியைச் சுமக்கும் வாசுகியை, நாணாகப் பூட்டினார். அக்கினி தத்துவத்தையே அம்பாக்கினார்.

மண்ணில், விண்ணில், பாதலத்தில் கோட்டை கட்டிப் பறந்த அசுர விஞ்ஞானிகள், இதை அறிந்தனர். ஹாஹாஹாஹா என்று ஆரவாரித்தனர். அது கண்ட உருத்திரர், முப்புரங்களை நோக்கி முறுவலித்தார். கோபக் கனல், நகையில்

என்றும் எதுவும் எமதென்னும் எண்ணத்தார்,
துன்றும் துயருள் துவண்டாடு கின்றாரே.

இருந்து கொப்புளித்தது. அதனால், பொல்லாத முப்புரங்கள் பொரிந்து கரிந்தன. இதன்பின், நாள்கள் கோள்கள் நலை யின்றி நடந்தன. அன்பர்கள் இவைகளை அறிந்தனர். ஹர ஹர என்று, போற்றி உள்ளம் புளகிதம் எய்தினர்.

தீய நினைவும், உதட்டுப் பசப்பும், கொடுமைச் செயலா கிக் குழம்பும். அதனிலிருந்து, விஷப் பூச்சிகள் போல் அவு ணர்கள உதிப்பர். பாழும் அக்கிரமத்தைப பரப்புவர். எங்கும் அதனால் இடர். எங்கும் கண்ணீர். சாதுக்கள் படும் சங்கடம் கண்டு, உருத்திரரும் அச்சுதரும் உருத்தெழுவர். கவலைக்குரிய களைகளை களைந்து, உயிர்களாகிய பயிர்கட்கு என்றும் உய்தி யளிப்பர். இச்சம்பவங்கள், இப்படி எத்தனையோதரம் நிகழ்ந்துள.

விண் மண் பாதலம் மூன்றும் கொண்டது ஒரு அண்டம். ஒரு காலத்தில், மோசமான மாயையின் சக்தி பெற்ற மும் மலங்கள், மூன்று தலைமை அசுரராகி முளைத்தன. சூரபது மன, சிங்கமுகன, தாருகன எனனும் பெயரை ஏனறன. கம் பீரமான 1008 அண்டங்களைக் கைவசப் படுத்தின. பெரும் அசுராவேசத்தைப் பெருக்கின. 108 யுகம்வரை, நைவிக் கும் அராஜக ஆட்சி நடத்தின. அண்டங்களின் அதிபர்கள் அலறினர். முடங்கி ஒடுங்கும் உயிர்களைக் காக்க முடியாமல், மாலும் ருத்திரரும் மயங்கினர்.

'காக்கக் கடவிய நீ காவா (து) இருந்தக்கால்,
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா!''

என்று அலறி உலகர் அழுதனர். விமல முருகா! விநயம் மிக்க அவர்கள் பிரார்த்தனைக்கு இரங்கி வெளிப்பட்டீர். வேலால் அவுணர்களை வென்றீர். அவர்களின மன்னன் சூரனை, மயில் ஊர்தி ஆக்கினீர். பதுமனை, சேவல் கொடி யாக்கிச் சிறக்க ஏந்தினீர்.

பொய்யுலக வாழ்க்கையினில், பொங்குதுன்ப சூழ்நிலையில்,
ஐயா! சிவனே! அழுங்குகின்ற(து) என்னுள்ளமே!

ஆயிரம் சிங்கமுக அதிபன் ஒருவனை, வரத தேவிக்கு வாகனம் ஆக்கினீர். ஆனைமுக அசுராதிபனை, அரிகர புத்திரர் வாகனம் ஆம்படி அடக்கினீர். அதன்பின் உலகம் அமைதி யடைந்தது.

'ஆழி கடைந்து அமுது ஆக்கி, அநேகர் பெரும்பசி தீர்த்தருள் ஆயனும்,.........(உருத்திர) வீரனும், அணுகினர். எவரையும் காக்க முடியாமல் கலங்கினேம். எமது பொறுப்பை ஏற்றீர்! பளுவை குறைத்தீர். வாழி குமரா! வாழி முருகா என்று வாழ்ததினர். வாழ்விக்கும் உமது பேரருள், மேலும் மேலும் வளர்ந்தது.

நெஞ்சில வஞ்சம். வாக்கில் நஞ்சம் ஆன இரக்கம் அற்ற அரக்கரை அழித்தபின், விண்ணவரைச் சிறையில் இருநது விடுவித்தீர். காமதேனுவுககு விடுதலை. ஐந்து தருக்களுக்கும் சுதந்தரம். இபபடி நிரநதர இன்பம், எவர்க்கும் எவைக்கும் நிலைக்கச செயதீர். இந்திரன் ஆதியரை, அவரவர் பதவியில் அமர்த்தினீர். எவர் குடிகளும், இவைகளால் ஏற்றம் எய்தின. அதனை ஓர்ந்து, குடியேற்றிய பெருமானே! என்று, வாயார உலகம் உம்மை வாழ்த்தியது.

இவ்வளவு தொல்லையும் விளைவது எதனுல்?

"பிறந்தோர் உறுவது பெருகிய துனபம்

பிறவார் உறுவது பெரும்பே ரினபம்." இது முதுமொழி.

ஆன்மா பேதமை காரணமாகப் பிறக்கும். அதிர வரும் வினையை அனுபவிக்கும். நியதி எனும் கடமையை நிறைவேற்றும், அதனுல், ஆகாமியம் உரு ஆவது இல்லை. அந்நிலையில், கசிந்து கசிந்து கடவுளைக கருதும். பெருகி இச்செயல் பிறங்கும் நிலையில, ஜீவ சுபாவம் சிறிது சிறிதாகச் சிதையும். அப் பரிபாகத்தில, எங்கே சிவம்? எஙகே பரம்

மெய்யாம் அருளிலெனை மேவவை! அன்னதனைச

செய்யாயோ என்றெனதுசிந்தைதளை கின்றதுவே!

என்று, ஏமாந்து ஆன்மா எத்திசையும் நோக்கும். தாபம் பெருகித் தவிக்கும். அதன் ஆர்வம் கண்டபரம், அந்த ஆன்மாவை ஆவலித்து அணுகும்.

ஆன்ம நோக்கம், அருள் நோக்கத்தை, இப்படிச் சிறிது சிறிதாக ஈர்க்கும். அக்காலத்தில், உயிரின் சுபாவம் முழுதும் ஒழிய, ஆடல் பலவும் காட்டும் அருளிறைவன். ஜீவன் சேய். சிவம் தாய். ஒன்றை ஒன்று தழுவ, இடையில் எழுகிற பாடு பல. கிணற்றில் விழுந்த சேய், அம்மா! அம்மா என்று முழுகி எழுந்து மொறுவும். அழைப்பின் அலறலை அறிந்த பின், அச் சேயை எடுக்க முயலும் அன்னையின் துடிப்பு நாம் அறிந்ததுதான்.

அந்த நியாயம் போல், பிறவிக் கடலில் ஆழ்ந்து, வேடச் சேற்றில் அழுந்திய வள்ளியார், சேர்ந்த இடத்திற்கு ஏற்ற செயல் செய்தார். அவர் இதயம் மட்டும், குமரா! இறைவா! குகா என்று குமுறிக் கொண்டே இருந்தது. அதை அறிந்தீர். உலகத்தில், உடம்பில் நின்ற அபிமானம் நீங்க நினைத்து, அணு அணுவாக அவரை அணுகினீர். ஆள் பவனே ஆனாலும், அவ்வளவு எளிதாக ஒரு ஆன்மாவை ஆண்டு கொள்ளல் ஆவதில்லை. அது கருதி ஆடல் பலவும் நடத்தினீர்.

பரிதாபங் கொண்டு, காலம் பார்த்து, வேளை நோக்கி, சமயம் அறிந்து அவரை ஆட்கொண்ட உமது அருளாற்றலை, மாதவர் உள்ளம் மறந்தது இல்லையே.

அவர்கள், வாணியைத் தம் நாவில் வாழ வைத்தவர்கள். அதனால், நாவலர் எனனும் பெயரும் எய்தினர்.

'வேடர் செழுந் தினை காத்து, இதண் மீதில் இருந்த பிராட்டி விலோசன அம்புகளால் தடுமாறி, மேனி தளர்ந்து, உருகா, பரிதாபமுடன், புனமேல் திருவேளை புகுந்த (உமது) பர ஆக்கிர மத்தை', வாயாரப பரிவு மிகுந்து பாடல ஆயினர்.

துன்பததால் உள்ளம் துரும்பாய்ச் சுழலாமல்
இன்ப இறைவா! எனையேன்று கொள்ளாயே.

யோக ஜீவனுக்கு, சிவ போகம் ஊட்டுபவர் நீர். அதற்கு அடையாளமாக, உமது திருவடிகளில் கடப்ப மலர்மணம் கமழ்கிறது. ஊன்றி அந்த அருமையை உணர்ந்து, பதினாலு உலகங்களும், அத் திருவடிகளை ஏத்திப் போற்றி இறைஞ்சுகின்றன.

வள்ளியார் திருமுன், 'திருவேளை புகுந்த' பராக்கிரமம் போல், அந்த அருளைப் பாடும் நாவலர்களையும், 'பரிவோடு புரந்தது உமது பராக்கிரமம'

பரத்திற்கென ஜீவனை ஆக்கிரமித்துக் கொள்ளும் அந்நிலை, பர ஆக்கிரமம் எனப் பெறும். அப் பராக்ரமத்தை அடியேன் சதா எண்ணி யிருக்கும் பேறு என்று வாய்க்குமோ? அதை, 'நாட அரும் தவம் வாய்ப்பதும் ஒருநாளே'? அரசே! துரையே! முருகா என்று, விரிட்டுப பிரார்த்தித்து விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.!

ஓம்.

அருணகிரிநாத சுவாமிகள் புராணம்

[திருவாரூர் முதல் சிக்கல் வரை]

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

திருவாரூரை (44) அடைந்தவர் அத்தலததைக் கண்டதும் ஆனந்த பரவசராய் "அரோகரா சரவணபவ!" என உளம் உருகிக் கூறி அததலத்திலுள்ள கமலாலய தடகமும்புனல் குடைந்து, வெண்ணீறணிந்து, தமது ஆத்ம நாயகர் எழுந்தருளிய ஆலயத்தை வலம் போந்து, பெருமான் சந்நிதியில் பலகால் வீழ்ந்து எழுந்து ஏழு திருப்புகழ் பாடல்கள் (820-826) பாடினர்; அவை தம்முள் "பாலோ தேனோ

திடமில்லை உள்ளத்தில், தெய்வஅருள் சீல
நடமில்லை, நண்பில்லை, நாணுகின்ற(து) என்னுளமே

பூாகோ" என்னும் பாடலில் (822) வள்ளி ஆலோலம் கூறிப் பறவை ஓட்டுகின்ற ஒலி இசையின் அழகைக் கேட்டுப் பெருமான் அவளுடைய காலில் விழுந்து அவளுக்கு ஆளாகி (அடிமையாகி) பொழுது போக்கினர் என்னும் கருத்தை,

" ஆலோ கேளா..............நற்புனமே போய்
ஆயாள் தாள்மேல் வீழா வாழா
ஆளா வேளைப் புகுவோனே"—

எனவரும் அடிகளிற் காணலாம்.

" கரமுமுளரியின்" எனத் தொடங்கும் (825) பாடலில் மநு நீதி சோழன் தனது மகன் மீது தேரைச் செலுத்திய வரலாற்றை விரிவாகக் கூறிச் சிறப்பித்துள்ளார். அச்சோழனுடைய பெருமையை,

" ....மன் மைந்தன் இரத மோதுண்டு வீந்த
தனதாவி அன்னபூங் கன்றுக் கிரங்கும் ஓர்
தாய்க்கபிலை அல்லல் தீர்ப்பான்,
கனிவோடு தானஈன்ற சுதன்மீது பூந்தேர்
கடாவி உலகைப் புரந்த,
மனு நீதி மன்.................." (980)

எனச் சேய்த் தொண்டர் புராண ஆசிரியர் குறித்துள்ளார்.

பின்னும், திருவாரூர் தலத்தின் பெருமையைத் தூயோர் ஆனோர், இத்தலமே சுகசிவபத வாழ்வுக்கு இடமாம் ஆதலால் இத்தலத்திலேயே நாம் இருந்து வாழ்வோம் என்னும் உணர்ச்சியுடன் அத்தலத்திலேயே சூழ்ந்திருப்பார். "தூயா ராயார் இது சுக சிவபத வாழ் வாழ் ஈனே, வதிவமெ னுணர்வொடு, சூழ்சீராரூர்" 826] என விளக்கி யுள்ளார்.

அடமில்லை, என்னுளத்தில் அன்பில்லை, வாழ
இடமில்லை இவ்வுலகில், என்செய்வன் பேதையனே!

அதன்பின், அத்தலத்திலுள்ளதாகக் கூறப்படும் [1] பெரிய மடத்து (45) முருகவேளைத் தரிசிததுக் "கலகவிழி" (827) என்னும் பாடலின் பின் நான்கு அடியில் "போற்றி" என ஒன்பது முறை கூறிப் பெருமானை வாழ்த்தித் "தலையறிவி லேனை நெறிநிற்க நீதீக்ஷை தர வேணும்" என வேண்டினர்.

மேலும், அப் பாடலில் அறுபத்து மூவரில் ஒருவரும், திருமந்திரம் பாடினவருமான திருமூலருக்குச் சிவபிரான "நாதன்" என்னும் பட்டத்தை அளித்ததுபோல், தனக்கு நாதன் என்னும் பட்டத்தை முருகவேள் தந்ததை [2] "அருண கிரிநாத எனும் அப்பனே போற்றி" (அருணகிரிநாத என்று என்னை அழைத்த அப்பா போற்றி) என்னும் அடியில் குறிப் பிட்டுள்ளார்.

---

[1] ஆனல், பெரிய மடம் எனபது கும்பகோணம் மகாமக தீர்த்தத்தின் வடகரையிலுள்ள வீரசைவ மடம் என்பர்.

"குடந்தையம் பதியில கோதிலார் பெரிய
மடந்தனில வாழ்வீர மயேச்சுரர் வாழியே"
—(தக்கயாகப்பரணி பக்கம் 255)

[2] "நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்..............
என்னே டெண்மரு மாமே" (திருமந்திரம் 67)
"நந்தி அருளாலே நாதனும் பேர் பெற்றேம்" (68)

"நாதர்" என்பது சித்தர்களுக்குள்ள ஒரு உயரிய பட்டம். இதனை 'நவநாத சிததர்' என வழங்கும் தொடரில் காண லாகும். ஆதி நாதர், அனுதி நாதர், சத்தியநாதர், சதோக நாதர், வகுளி நாதர், மதங்க நாதர், மச்சேந்திர நாதர், கடேந்திர நாதர், கோரக்க நாதர் ஆகிய பிரதான சித்தர் ஒன்பதின்மர்.

"நவநாத சித்தர்களும் உன் நட்பினை விரும்புவார்"
—(தாயுமானவர் - மௌன 7.)

பொய்யோ அடியேன் புகல்செய்தி? என்னுள்நீ
ஐயோ இருந்தால் அவதியுற மாட்டேனே?

இப்பாடலின் ஈற்றடியில் "பிரமனறியா விரத தக்ஷிண மூர்த்தி" என முருகவேளைக் கூறி யுள்ளார்.
இது பிரணவப் பொருளை அறியாத பிரமனைச் சிறையிட்ட வரலாற்றில் முருகவேள் தந்தைக்கு தக்ஷிணாமூர்த்தி (உபதேச மூர்த்தியாக) இருந்தார் என்பதைக் குறிக்கும். இப்பாடலின் பின் நான்கு அடிகளுடன் நாலாம் அடியின் ஈற்றிலுள்ள "தலையறிவிலேனை நெறி நிற்க நீ தீக்ஷை தரவேணும்"— என்பதைச் சேர்த்து மனப் பாடத்துக்கு உரியதாகக் கொண்டு இறைவனை நித்தம் போற்றுதல் நன்று.

பின்னர் திருவாரூரினின்றும் புறப்பட்டுச் சிங்கார வேலர் வீற்றிருக்கும் சிக்கல் (46) என்னும் தலத்தை யடைந்தார். உளம் நெகிழ்ந்து இரண்டு பாடல்கள் (830-831) பாடினார். "கன்னல ஒத்த" (830) என்னும் பாடலில் "சிக்கலை" "செல்வ சிக்கல் நகர்" எனச் சிறப்பித்துள்ளார். "புலவரை ரட்சிக்கும்" (831) என்னும் இரண்டாவது பாடலில் அத் தலத்து நந்தவனத்திலுள்ள புஷ்பங்களின் நறுமணம் "திசை தொறு முபபத்தெண் காதம் வீசிடும்" என்றும், முருகவேளை அழகிய சிக்கற் சிங்கார வேலவ" என்றும் கூறிச் சிறப்பித் துள்ளார்.

எண்கண், எட்டிகுடி, சிக்கல் என்னும் மூன்று தலங்க ளில் உள்ள முருகவேளின் திருவுருவம் ஒரே சிற்பியால் ஆக்கப்பட்டது என்றும், எண்கண் முருகன் அழகுக்கு ஈடாகப் பிறிதொன்று அச்சிற்பி செய்யக் கூடாது என்று அவனுடைய ஒரு கையை அரசன் தறித்து விட்டான் என்றும், அச்சிற்பி ஒரே கையால் எண்கணிலும் அழகாக முருகவேள் உருவத்தை எட்டி குடியிலும் அமைத்தான் என்றும், அதைக் கண்ட அரசன் சிற்பியின் பிறிதொரு கரத்தையும் வெட்டி விட்டான் என்றும், இரண்டு கைகளும் இன்றி அச்சிற்பி முருகவேள் அருளால் சிக்கலில் "எண்கண், எட்டிகுடி என்னும் இரண்டு தலங்களில் உள்ள முருகவேளின் உருவங் களின் அழகை விட மிக அழகான சிங்கார வேலரை அமைத் தான் என்றும், அவ்வேலவர் அப்படியே அவனைக் கந்த லோகத்துக்கு அழைத்துச் சென்றனர் என்றும், ஒரு கர்ண பரம்பரைச் சேதி உலவுகின்றது.

சுரசம் 27

தஞ்சாவூர் மாணிக்கம்

(அன்பன்.)

மதியை அழித்தது மது. அதனுல் அநேக அழிவு செய்தவன் ஒரு அசுரன். அவன் பெயரே மது. இறுதியில், மாதவரால் அவன் மாய்ந்தான். அவன் கால் வழியில், மூவர் அசுரர் முளைத்தனர். ஒருவன் பெயர் தஞ்சன். அடுத்தவன் தண்டகன். கடையவன் கஜமுகன்.

கண்ணுதலை உளங்கொண்டு, மூவரும் கடுந்தவம் செய்தனர். தவத்தின் தணலால், எங்கும் எரிவு எழுந்தது. நீர் நிலைகள் வற்றின. காடுகள் பல கரிந்தன.

அருந்தவர் பராசர், இதை அறிநதார். விண்ணுட்டிற்கு விரைந்தார். வரவேற்று வணஙகிய இநதிரன், அவர் விரும்பியபடி அமுதத் துளிகளை அளித்தான். அரிய உபசாரம் பல செய்து அனுப்பினுன். மீண்ட பராசர், அத துளிகளை, தம் ஆஸ்ரமத்தைச் சார்ந்த இனிய பொய்கையில் இட்டார். அவ்வளவில் அது, வற்ருப் பொய்கையாகி வளர்ந்தது. மகிழ்ந்த முனிவர் பலா, அதில் நீராடினர்; நியதி செய்தனர்.

அருந்தவம் செய்யும் அசுரர் முன், சிவனுர் பிரசன்னர் ஆயினர். கண்ட அசுரர்கள் விழுநது வணஙகினர். எழுந்து ஏத்தினர். எந்தை பெரும! எங்கட்கு, இறவா வரம் தா என்றனர்.

நேர்மை உள்ளவர் நிறைவு பெறுவா. தீமை நினைவு ஒவ்வொன்றும், வாழ்க்கையைத் தீய்த்துவிடும். எவராலும் உங்கட்கு மரணம் இலலை. இது தவம் தநத பரிசு. அவம் செய்தால், எம் அங்கமான திருமாலால், வளர்ச்சிக்குத் தளர்ச்சியுறும். வாழ்ச்சி வீழ்ச்சியுறும் என்று அருளி, திருவுருக் கரநதார் சிவபெருமான்.

* * * *

குற்றம் குணமாகக் கொள்கின்ற நின்னருளை,
உற்றுணர வைத்தே உவகைபெறச் செய்யாயோ?

அருந்தவத்தில் வெற்றியுற்ற அவர்கட்கு, அவுண இனத்தவர் வெற்றி மூர்லை சூட்டி விழா நடத்தினர். இன்றுமுதல் எங்கள் தலைவர் நீங்கள்தான் என்று, போற்றிப் பலசொல்லிப் புகழ்ந்தனர். புகழ்ச்சி பெருகப் பெருக, மாதேவர் தந்த வரத்தை மறந்தனர். அகில உலகையும் கட்டி ஆள வேண்டும் என்னும் நினைவு எழுந்தது. முடிவு கட்டி முயன்றனர்.

கடியவர் கொடியவர் கடல்போல் பெருகினர். எங்கும் சென்றனர். எவரையும் வென்றனர். அமரரும் முனிவரும் அஞ்சி யடங்கினர். ஓடி இந்திரன எங்கோ ஒளித்தான். திக்குப் பாலகர் திக்பிரமை எய்தினர். தர்ம தேவதையோ தலைகுனிந்தது.

தானவர் இந்திர உலகைத் தம்மதாக்கினர். ஏகபோக வாழ்க்கை எய்தினர். கொடுங்கோல் ஆட்சி கொக்கரித்தது. மாதர் அஞ்சினர். மாதவர் கலங்கினர். பாதக காரியம் பலவும் நடந்தன.

நீர்மை நிலை குலைந்த பயனாக, எங்கும் நீர் இல்லை; தண்ணீர் தண்ணீர் என்று, எவரும் தவித்தனர். அவுணர்கள் தவம் செய்த காலத்தும் இந்த அவதி. கொடுங்கோல் ஆட்சியிலும் இந்தக் குமுறல். தீயவர்கள் நலம் செய்தாலும், அதில் தீமையே விளையுமோ என்னவோ ? அட பாவமே !

புனிதர் பராசர் ஆஸ்ரமப் பொய்கை ஒன்றுதான், அமுத நீர் நிரம்பி வழிகிறது. அதை அவுணர்கள் அறிந்தனர். அயலார் பொருளை அபகரிக்கும் அநியாய வாதிகளாய், அணுகினர் எருமைகள் போல் குதித்துப் பொய்கையைக் குழப்பினார். தடுத்த முனிவர்களைத் தலையில் குட்டினர். விறுவிறுத்த அவர்களை விரட்டினர். இது எங்கள் ஓடை என்று, உரிமை கொண்டாடி உருத்தனர்.

காணேன் திருவருளை, கண்டிலேன் ஞானிகளை,
வீணே பொழுது விரையமா கின்றதுவே.

பராசர் இதை யறிந்தார். அவர் மனம் பதைத்தது. கயிலையை யடைந்தார். சிவத்தைச் சிந்தித்தார். கணநேரத் தவம். பெருமான் பிரசன்னர் ஆயினர்.

பராசா ! உனது நினைவை உணர்ந்துளம். தவம் செய்வர். வரம் பெறுவர். அதன் பின் தலைதடுமாற்றம். விதிவழி வாழ்வு. கை கொடுத்தவரால் கரையேற மாட்டார். அவரையும் இழுத்துச் சேற்றில் ஆழ்த்துவர். இதுதான் உலகம். இதனால்தான், எவர்க்கும் எளிதில் யாம் அருள்வது இல்லை. இப்படி எத்தனையோ செய்திகள் இருக்கின்றன.

கொடுப்பது ஒரு கையால்; கொல்வது ஒரு கையால் என்பது மரபல்ல. எமது உருவமான திருமால், அந்த அசுரர்களை அழிப்பர். அதன்பின் உலகம் அமைதியுறும் என்று அருளியதும், திருவுருக் கரந்தார் அத் தேவதேவர்.

அதனபின் பராசர், துளவமணி மாலையனை, சிந்தித்துத் தவம் செய்தார். கருடவாகனர் காட்சி யாயினர். *பராசரே! அஞ்ச வேண்டா !* எனறு ஆறுதல் கூறினர்.

அவர் அனுப்பிய பெரிய திருவடி, அசுரர் அனைவரையும் அழித்தார். எனினும், தலைவர் மூவரை எதிர்க்க முடியாமல் தவித்தார்.

அது கண்ட முகுந்தர், ஏக காலத்தில் மூவரையும் எதிர்த்தார்.

அச்சுதா ! என் பெயர் தஞ்சன். தஞ்சமடைந்து உஞ்சி ஓடு என்று தருக்கி உரைத்தான் தலை அவுணன.

ஆனைமுகன், அதிர்வெடிபோல் நானிலம் அதிர நகைத்தான். *நாராயணா ! போ ! பாற்கடலில் நிம்மதியாகப் படுத்துக் கொள் !* இன்றேல், என் முன் யூனைமுகமாகிப் பொன்றுவை என்று பொருபொருத்துப் புகன்றான்.

நானேன் விலங்குணர்வை; நலலகலை ஞானவருள
பூணேன்; அறம்புரியும் புந்தியிலேன் உய்வேனோ ?

கேசவா! நான் தண்டகன். சரணடையாரைத் தண்டிக்கும் தகுதியன். உயிர் வாழ நினைத்தால் ஓடிவிடு என்று, இரக்கம் கொண்டவன்போல் எழும்பிக் குதித்தான்.

வரத நாரணர் நகைத்தார். வாய்ப் பேச்சு வேண்டா! அது கையால் ஆகாதவர் கதை என்று, தம் கரவேகம் சரவேகம் காட்டினார். இருதிறத்தும், நானிலம் அதிர யுத்தம் நடந்தது. இதனால் அகில உலகும் அதிர்ந்தன. முடிவு என்ன?

தஞ்சன் தலை, தடம் புரண்டு உருண்டது. அவன் இறந்த இடம், தஞ்சாவூர் என்று, இன்றும் பெயர் பெற்று இருக்கிறது.

ஆனைமுகன முன் அச்சுதர், நரசிங்க உருவம் எடுத்தார். கடுத்து எதிர்த்தார். அவன் தலையும் அறுந்து விழுந்தது.

காதக தண்டகன் கடும்போர் இட்டு, ஓடிப் பாதலத்தில் ஒளித்தான். தோலா முகுந்தர் தொடர்ந்தார். விஷபூச்சி ஒன்றுதான். அதை விட்டு வைத்தால், அதனிலிருந்து ஆயிரம் பிறக்கும். அதை உணர்ந்தார். வராக வடிவம் கொண்டார். பாதலம் புகுந்தார். பாதகனைக் கண்டார். எதிர்த்தார். கடும் சமர் நடந்தது. கொடியோனைக் கொன்றார். எடுத்து மேல் எறிந்தார். அவன் உடலம் வந்து விழுந்த இடம், தண்டக வனம் என்று, இன்றும் பெயர் எய்தி இருக்கிறது.

விமல நாரணர், பிலவழியே வெளிப்பட்டார். அந்த இடம், ஸ்ரீமுஷ்ணம் என்ற பெயர் எய்தியது. அன்பர்க்குச் சேவை யளித்து, பூவராகர் இன்றும் அங்கு எழுந்தருளி யிருக்கின்றார்.

சிவமாகித், திருமாலாய், அறக்கருணை மறக்கருணையால், ஆன்ம வர்க்கத்திற்குத் தெய்வம் அருளிய வரலாறுகள், இங்ஙனம் அளவிறந்தன உள.

புது ஆஸ்திகப் போர்வை சில, புனித இத்தகைய வரலாறுகளில் புகுந்தன. சமய சச்சரவுகளை, தம் பாவ

ஆயிரம்பேர் ஆனாலும், அத்தாநின் பேருளின்
பாயிரம்போல் ஆவரோ? பாராய்கண் பாராயே!

யுக்திக்குத் தக்கவாறு படைத்தன. பாமரர் சமுதாயத்தில், மத வெறியைப் பரப்பின.

அதன் பயனாக, 'கஞ்சா அடிச்ச வெறியிலே, வரங் கொடுக்கத் தெரியலே' என்று லாவணி பாடினர் ஒரு சிலர்.

எங்கள் பெருமாள் இல்லையானால், சிவன் தந்த வரத்தால், அன்றே உலகங்கள் அழிந்திருக்கும். எங்கள உலக நாதரால் தான், உலகம் இன்றுவரை உய்கிறது; சிவனும் க்ஷேமமாக இருக்கிறார் என்று ஒப்பாரி ஓதுகிறார் சிலர்.

அவைகளைக் கேட்டு ஆத்திரங் கொண்ட பிறர், எங்கள் சிவனார் தந்த வரத்திற்கு, அச்யுதரும் பெரிது அஞ்சினர். அதனால்தான், கருடனை ஏவி, அசுரப் படைகளை அழித்தார். சிவனார் தந்த வரத்தின்படிதான், திருமாலுக்குத் தஞ்சன ஆதியர் தலைகளைத் தள்ள முடிந்தது. சிவனார் இல்லையானால், திருமால் ஏது? என்று, ஏளனக் குரலகளை எழுப்ப லாயினர்.

அருள் நூல்களை அமைதியொடு ஓத வேண்டும்; உணர வேண்டும். திருவருள் கைகொடுக்க எண்ண வேண்டும்; எழுத வேண்டும்; இதுதான் நியதி. அஃது இல்லாமல், வாத நோய்களை வளர்த்தால், எத்தனையோ சங்கடங்கள் எழும்பிக் குதிக்கும்.

பெரியவர்கள் செய்யும் இப் பிழைகள், சிறுவர்களைத் தவறான படுகுழியில் தள்ளும் என்பதை, அனுபவ பூர்வமாக இன்றைய உலகில் அறிகிறோம். இனியாயினும், 'ஒன்றே தெய்வம்.' அது, பல உருவம் கொண்டு அருளாடல் புரிகிறது என்று அறிந்து வழிபடுவதுதான் அமைதிக்கு வழி.

தஞ்சன ஆட்சியும், அவனை யடக்கி யாண்ட தற்பர ஆட்சியும் என்றும் எவர்க்கும் இனிது விளங்க, சிவபிரானும் திருமாலும், தஞ்சை மாமணி எனும் திருநாமத்துடன் இன்றும் தஞ்சாவூரில் எழுந்தருளியுள்ளர். இந்த ஒற்றுமையை எண்ணி னாலும் உய்ய வழி உண்டு!

வாழ்க சமரச வழிமுறை.

ஓம்.

நின்போலும் அன்புடையார், நீணிலத்தில் இல்லையென
உன்னும்போ தெல்லாம், உருகுகின்ற(து) என்னுளமே.

தயக்கமும் மயக்கமும்.

(கி. வா. ஜ.)

குறமின் கொடி தோள் புணரும் தேவனை எண்ணிய அருணகிரியாருடைய கருத்தில் முருகன் வள்ளியை மணந்த கதை நினைவுக்கு வருகிறது. அவன தன் கருணையை எளிதில் வள்ளி நாயகிக்கு வழங்கத்தானே வலிநது செனறான். அவன் தியஙகினவனைப் போலவும் மயங்கினவனைப் போலவும் திரிநதான். அத்தனையும் நாடகம். வள்ளி நாயகியை எப்படி யேனும் குறவரிடத்தினின்று மீட்டு உயரிய நிலையில் வைத்து ஆடகொளள வேண்டும் எனற பெருங் கருணையினால் அவ் வாறு செய்தானே யன்றி, அவன் மயலில் ஆழ்ந்து அவ்வாறு செய்யவில்லை.

நாமோ மனையாள் என்றும் மக்கள் என்றும் மனத்தில் பற்றை வளர்த்துக் கொண்டு திண்டாடுகிறோம். ஈஷணாத் திரயத்தினால் துன்புறுகிறோம். இந்த நிலை இறைவனை எண் ணாதவர்களிடம் இருப்பது வியப்பு அன்று. நோயுள்ளவர்கள் மருந்துண்ணாமல் நோய்க்குக் காரணமான உணவுகளை உண்டு வாழ்ந்தால், அவர்களிடமிருநது நோய் அகலாமல இருப்பது இயல்பே. அது மேலும் வளரும். மருந்து உண்பவனுக்குத் தான் நோய் தீரும்.

சிறந்த மருத்துவரிடம் மருந்து உண்ணத் தொடங்கிய நோயாளிக்கு நோய் தீர்ந்து உடனே சுகம் உண்டாக வேண்டும் என்ற ஆததிரம் இருக்கும். ''டாக்டர் ஸார், நான ஒரு வாரமாக மருநது சாபபிடுகிறேனே! நீஙகள் சொன்ன மருந்தை உட்கொள்கிறேனே! இன்னும் குணத்தைக் காண வில்லையே! இனனும் சரியான தூக்கம் இல்லை; பசி இல்லை; இப்படி இருக்கலாமா? உஙகள மருந்தை உண்டும் இந்த நிலையில் மாறாமல் இருப்பது முறையா?'' எனறு கேட்கிறான்.

என் துன்பம் நீக்கென்றே ஏததும் சுயநலத்தை,
மன்னே! பொறுத்து, மதிதெளியச் செய்யாயோ?

கடப்பாறையை விழுங்கி விட்டுச் சுக்குக் கஷாயத்தைக் குடித்து ஜீரணித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறவன் கதைதான் இது.

இந்த நிலையில் இருப்பவருடைய கூற்றாக அருணகிரியார் ஒரு பாட்டைச் சொல்ல வருகிறார்.

"சுவாமி, அஞ்ஞானம் என்னும் நோயினால் நான் சம்சார பந்தத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கிறேன். இன்னது செய்வது என்று தெரியாமல் தியங்குகிறேன்; தடுமாறுகிறேன். இதைச் செய்தால் என்ன என்று எதையோ செய்து மயங்கி நிற்கிறேன். அஞ்ஞானத்துக்கு மாற்று, ஞானம் என்பதை அறிந்தேன். அந்த ஞானத்தை வழங்கும் மருத்துவன் நீ. பண்டிதன் நீ என்பதை உணர்ந்தேன். நீ ஞான பண்டித சாமி அல்லவா? உன்னிடம் ஞானமே உருவாகிய கதிர்வேல் இருப்பதைத் தெளிந்தேன். அதை உட்கொண்டால், உள்ளத்தே கொண்டு தியானித்தால் உள்ளத்தே கப்பி யிருக்கும் அறியாமை யிருள் நீங்கும் என்ற உண்மையை யறிந்து அதைத் தியானிக்கிறேன்; என்றும் மறவாமல் நினைத்துக் கொண்டிருக்கிறேன்."

அவருக்கு கதிர்வேல் என்னும் ஞான மருந்தின் சிறப்பும் தெரியும். அது பாவங்களை யெல்லாம் கண நேரத்தில் ஓடி விடும்படி செய்யும். என்ன பாவமோ மனையோடு தியங்கும் நிலை வந்திருக்கிறது. அந்தப் பாவத்தைப் போக்கும் மருந்து கதிர்வேல்; வினை ஓட விடும் கதிர்வேல்.

அதை மறவாமல் எண்ணி யிருந்தும் பயன் கிட்டவில்லை; தியக்கமும் மயக்கமும் நீங்கவில்லை. இன்னும் மனைவி மக்களோடு பற்றிலே உழன்று துன்புற வேண்டி யிருக்கிறது. கதிர் வேலை நினைந்ததற்கு இதுதானா பயன்?

சாதகரை ஆள்வதனிற் சால்பில்லை; என்போலும்
ஆதரைநீ ஆண்டால், அருளாளன் ஆவாயே.

இவ்வாறு கேட்கிறார் அருணகிரியார். மருந்து உடம்பிலே ஊறின பிறகுதான் வேலை செய்ய ஆரம்பிக்கும். அதை உண்ட மறுகணத்தில் நோய் தீர்ந்து விடாது.

இறைவனை அணுகி வழிபடும் முறையும் அத்தகையது தான். அந்த வழிபாடு நம்முடைய கருவி கரணங்களிலே ஊற வேண்டும். அப்போதுதான் அதற்குப் பயன் தெரிய வரும்.

"நானும் விடாமல் கோவிலுக்குப் போய் வருகிறேன்; ஜபம் செய்கிறேன்; முருகனைத் துதிக்கிறேன்; அவன் இன்னும் கண் திறந்து பார்க்க வில்லையே!" என்று சொல்கிறவர் பலர். எத்தனையோ பிறவிகளாக ஏறி யிருக்கும் வாசனை எளிதில் நீங்குமா? நல்ல வாசனை ஆழமாகவும் உறுதியாகவும் ஏற ஏறத்தான பழைய வாசனை போகும். கடைக்குப் போய்ப் பணத்தைக் கொடுத்துப் பண்டத்தை வாங்கி விடுவது போல தேக சுகத்தையும் வாங்க முடியாது. ஆன்ம சுகத்தையும் வாங்க முடியாது.

இவற்றை அறியாமல், தாம் செய்த வழிபாட்டுக்குச் சரியானபடி அருள் பாலிக்கவில்லை இறைவன் என்று குறைப் படுவாரைப் போலப் பேசுகிறார் அருணகிரியார்.

வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்;
மனையோ டுதியங்கி மயங்கிடவோ!

[பாவங்களை ஓடும்படி செய்யும் ஒளியை யுடைய வேலாயுதத்தை என்றும் மறவாமல் தியானிப்பேன்; அப்படி இருக்கவும் அடியேன சம்சார பந்தத்தில அலைந்து தெளிவின்றி நிற்கலாமா?]

மனையோடு தியங்குவதைப் போல முருகன் ஒரு நாடகம் ஆடினான். வள்ளி நாயகியைத் தேடிச் சென்று திரிந்தான். அவ்வாறு திரிந்தவனை அணுகினால் நாம் திரிவது தீருமென்று எண்ணுகிறார் அருணகிரியார். அவன் அருளை வழங்குவதற்குத் திரிந்தான. நாம மருளைச் சேர்ப்பதற்குத் திரிகிறோம். இந்த நிலை மாற அருளாளனிடம் விண்ணப்பம் செய்து கொள்கிறார்.

தீதகத்தன்; மெய்ம்மைத் தெளிவுசிறி தில்லாத
காதகன்யான்; எற்குக் கனிவளித்தா லாகாதோ?

கொங்கணர் (2)

[ரஸபதி]

விசாரணை

உடம்பில் இன்று உறவு. இது விதி செய்த சதி. நாளை என்ன ஆகுமோ யாரறிவார்? விதி தந்த இவ்வுடல், ஒரு நாள் வீழ்ந்து விடும். அது யாதாயினும் ஆக. நாறும் உடம்புள் குடியிருக்கும் நான் யார்?

அறிவிப்பார் அறிவித்தால், அறிந்து கொள்ளும் அறிவு மயமான ஆன்மா நீ!

ஓ, அப்படியா! நான் என்ன செய்ய வேண்டும்?

அஹம் ஆத்மா! அஹம் ஆத்மா என்று, இடையறாது உன்னை நீ எண்ண வேண்டும்!

அதனால் யாது பயன?

இதனால், என் இனம், என் உறவு, என் மொழி, என் தேசம் என அபிமானித்து அலைய வைத்த மாயை,

" வகுத்து விட்ட கற்பனைகள் மாய்ந்து போகும்
வளமான ரூபமெல்லாம் நீயாத் தோன்றும்
தொகுத்து நின்ற நாட்டமெல்லாம் வெளியாய்த்
[தோன்றும்
சுத்தவெளி தானுமொரு கடுகாய்த் தோன்றும் "

" அறிவை அறிவது பொருள்" என்பர் மேலோர்.

" அறிவை நீ அறிந்தாலே பிறவி போச்சு
அடுத்தாற்போல் பரமபதம் நிலையதாச்சு
குறிகுணமே மோகமதம் எல்லாம் போச்சு "

இருளறியாத் தீபத்தை ஏற்றியுள்ள ஞானிகள்போல்,
பொருளறியா என்னுள்நீ புக்குறைந்தா லாகாதோ?

தெரிகிறதா! உன்னை நீ உணர்ந்தாயானால், உன் அறிவு, விண் முழுதும் ஊடுருவி நிற்பதுவும் விளங்கும். ஆதலின், அஹம் ஆத்மா என்னும் இவ் வித்தக சாதனையை விடாது இரு!

'' விண்ணப்பா தானாகி நின்று வாழ்வாய்
விடாதே நீ, விடாதே நீ, விட்டாற் போச்சு.''

எச்சரிக்கையா யிரு! என்று, அருளொடு கொங்கணர் அறிவிக்கும் அருமையே அருமை.

நீடித்து இங்நினைவு நிலைக்குமானால், உன் அறிவின் நடுவில், பசுமை ஒளி எழுந்து பரவும். இன்ப அந்த ஒளியுள் இருப்பது யார்? மயங்காதே!

'' ஆருமல்ல ஆருமல்ல ஆத்தாள் ஆத்தாள்!''

தெரிந்து கொள்! தெரிசனஞ் செய்! கூம்பிய உணர் வொடு கும்பிடு! வரததேவி, வாழ வழிகாட்டுவள்! அறிவு தான் ரூபம்; அதன் சொரூபம் அமலை.

'' அறிவொடு கூடாமல், வாத சிததிக்கு
அலைந்தன்றோ வெகு ஜனங்கள் மாய்ந்து போனார்.''

தேவியின் திருவருளில் திளைக்காமல், பணப் பயித்தியம் பிடித்தலைந்த இரசவாதிகள், சொந்த முயலவு செய்து சோர்ந்த கதை பல. இதையும் அறிந்துகொள் என்று இப்படி அறிவிக்கிறார்.

சாதனை.

இரு துளைகள் நாசியில் இருக்கின்றன. வலது துளை சிவம்; செவ்வாய், சனி, ஞாயிறுகளில் விளக்கமாகச் சுவாசம் அதன் வழியே வெளிபபடும்.

இடது துளை சக்தி; திங்கள் புதன் வெள்ளிகளில், பிராணன அவ்வழியே வெளிவரும்.

மருளறியா மன்னே! நின தாளிணையில் மன்னும்
தெருளறியா என்னைத், தெளிவித்தால் ஆகாதோ?

வியாழனில் மட்டும், வளர்பிறையானல் சத்தி கலை; தேய்பிறையானல் சிவகலை. அஹம் ஆத்மா என்று அறிந்து உணரும் சாதகர்க்கு, சிவகலையும் சக்தி கலையும் இயற்கையாகவே இயங்கும். இந்நிலை மாறி இயங்குமானல், அதன் எதிர்ப்புற அக்குளைச் சிறிது அழுத்தினல் போதும். அதன் பின் ஒழுங்காகக் கலைகள் உலவி வரும். யூகம் மிகுந்த சாதகர்கள், இது கருதியே யோக தண்டம் ஏந்தியுளர்.

இதன் பயனாக, வாங்கலும் விடுதலுமான சுவாசம், அகமுகமாகி அடங்கி விடும். இதன் பெயரே கும்பகம் எனப பெறும்.

அவ்வமயம், மூலாதாரத் தீ மூண்டு எரியும். எரிவு மேலேற ஏற, அமுத துவாரத்தை அடைத்திருக்கும் குண்டலினி, அவ் வெபபம் தாங்காமல் அகன்று விடும். அந்நிலையில், இறுகியுள மதியமுதம் உருகி வரும். அதை உண்டு உய்யும் இந்த உயிர்.

காலத்தைச் சோம்பிக் கழிக்காதே! இது நம்மால் இயலுமா என்று எண்ணுதே! பாடு பட்டால் பயன் உண்டு. இதனுல் இடகலை, பிங்கலை, சுமுமுனை என்னும் நாடிகள் மூன்றும் நலமடையும்; புனிதமான அவைகளின் சொரூபம் புரிதலுறும். வாத பித்தமாதி நோய்கள் யாவும், உருண்டு புரண்டு ஓடி விடும். இருவினை வேதனை எரிந்துபடும். வர வர தேகம் வன்மையுறும். ஓங்கார நாதம், ஒளி வெள்ளமாகி உன்னை உயர்த்த வரும்.

"ஆமப்பா இப்படியே கண்டேன் கண்டேன்;
அப்பனே நீயுமிப் படித்தான் பாரே!"

என்று, அருளொடு கொங்கணர் பல கோணத்தில் அறிவிக்கிறார். சொக்க வைக்கும் அவர் சொற்களில், இலக்கிய

அடுத்தாரைக் காக்கும் அடியார்க்கே, என்னைக்
கொடுத்தேன்; அவர்ஆசி கொள்ளவிழை கின்றேனே!

வளமும், கண்முன் காணும் அனுபவங்களும் விளங்கித் துள்ளி விளையாடுகின்றன.

"காலைப் பிடித்திழுத்துக் கந்தரத்தின் மந்தரத்தை
ஓலமிட் டேதினமும் ஊதினால்—பாலைப்
புசிக்கலாம்; தேகமது போகாமல், என்றும்
வசிக்கலாம் காணும் வகை."

[*கால் - பிராணன், கந்தரம் - கழுத்து. ஓலம் - கூப்பிடும் ஒலி. ஊதுதல் - (இனிய நாதம் எழ, சுவாசத்தை) ஈர்த்து விடுதல். பால் - அமுதம்.*]

காலைப் பிடித்துக் கதறி வேண்டினால், எவர்க்கும் இறக்கம் பிறப்பது இயற்கை. விளையும் பயனும் பெரிதாகும். இந்த அனுபவத்தை, இப்படி யன்றி வேறு எப்படிச் சொல்வது?

"கொல்லன உலைமேலே கூத்தாடி தன்மேலே
இல்லனது மேலே இருக்கின்றான்—பொல்லாத
நாக்கை அடக்கி, நவிலும் படியிருந்தால்
ஆக்கை அழியா தது."

[*கொல்லன உலைமேல் - மூலாதாரக் கனலின் மேல், கூத்தாடி தன் மேல் - ஆட்டம் போடும் (குண்டலியாம்) அரவின் மேல். இல்லன் - (உடம்பாகிய) வீட்டிற்கு உரிய பிராணன். நாக்கை யடக்கல் - மௌனத்தை மேற்கொள்ளல். நவிலும்படி இருத்தல் - உள் நாதம் பேசுதலை உணர்தல்.*]

கொல்லன உலை என்பதனால், எழுகிற மூலக் கனல்நிலை எப்படி யுளது எனலை யறிந்து கொள்! தகிக்கும் அதன் வெப்பம் தாங்காமல், அதன்மேல் அரவ ரூபக் குண்டலினி எப்படி ஆடுகிறது என்பதும் தெரிந்து கொள்! உடல இயக்கத்திற்கு உரிய பிராணன, குண்டலினிக்கு மேல் எங்ஙனம் குலவுகிறது என்பதையும் உன்னிப்பாக எண்ணிப் பார! இவைகளை அறிந்து மகிழ, மோனம் கொள்! ஆஹா! உள்ளிருந்து

வாடி வருந்துகின்ற வாழ்க்கையரை விட்(டு,) உன்னைப்
பாடும் பரிசே பரிசா அருளுதியே!

எழும் நாதம், உன் நிலையறிந்து ஏதேதோ ஓதும். வாய்ச் சொல்லும், மன நினைவும் மடங்கி யடங்க, அதன் பின்தான் அந்த நாத போத அனுபவம்.

" கொல்லன் உலைபோலே கொதிக்குதடி என்வயிறு
நில்லென்று சொல்லி நிலைநிறுத்தக் கூடுதில்லை
நில்லென்று சொல்லி நிலைநிறுத்த வல்லார்க்கு
கொல்லென்று வந்தநமன் குடியோடிப் போகானே "

என்று, இதை அடியொற்றி அழுகண்ணி சித்தர் பாடுவதையும் அறிந்துளம். இன்று பழைய குருகுலம் இல்லை. இன்றைய பள்ளியில் இதுகுறித்துப் படித்தது இலலை.

மேடை விரிவுரைகளிலும், இது குறிதத விளைவு இல்லை. கொங்கணர் போன்றவர்கள் கூறும் குறிப்புகளில் இருந்து தான், அரிய நம் சொந்த வாழ்வை அறிந்து கொள்ள முடிகிறது.

வீணே ஆன்ம வாழ்வு விரையம் ஆகிறது எவர்க்கும் எதன் மேலும் அபிமானம் இல்லை. தேசாபிமானம், பாஷாபிமானம், இன அபிமானம், உடலபிமானம் உடையவர்கள் போல [illegible] என்று பேச்சுகளைக் கொட்டுவர். இரசகத்தின [illegible] அந்த அபிமானம் இருநதாலும் பிழையில்லை. [illegible] உருட்டுப பேசசு. எவரிடத்தும் எதனிடத்தும் இதய பூாவமான அபிமானம் இருப்பதே இல்லை. சீச்சீ, எனன மோசமான சூழ்நிலை !

இதனால் யாது விளைகிறது தெரியுமா? பன்னிரண்டு அங்குல சுவாசம் படபடத்து ஓடுவதுதான கண்ட பலன். அதனால் அயற்சி அதிகரிக்கும். ஆக்கை பலவீனம் ஆகும். அகால மரணந்தான அனுபவம். அட பாவமே! வீணான இப் பேய்க் கூத்தை விட்டுவிடு ! இனிய அனுட்டானததில் இரு !

நாயேன நயமறியேன், நல்லோர்தம் சார்வறியேன் ;
சேயேன் எனைப்புறம் தள்ளேல்மெய்ச் சேவகனே !

"கட்டாக் குதிரை, காயக் கடைவழியே
எட்டுடனே நாலுமாய் ஏகுதே—பொட்டெனவே
ஓடி மறியடா ! உள்ளே வரவாசி
நாடியதில் ஏற நலம்."

[கட்டாக் குதிரை - கட்டுப் படாத குதிரைபோல் கண்டவழி ஓடும் பிராணன். காயம் - தேகம். கடை வழி - சீழ்த்தரமான வழியில்; எட்டுடனே நாலுமாய் - பன்னிரண்டு அங்குல நீளமாய். பொட்டென என்பது, விரைவுக் குறிப்பு. ஓடி மறி - (மெல்ல) ஓடவிட்டு மடக்கு. வாசி நாட - (வாசி எனப்பெறும் சிறந்த) குதிரைமேல் சிந்தனை செலுத்தி. அதில் - அக் குதிரைமேல்.]

அஹம் ஆத்மா; சிவம் அஹம்—சிவோஹம் என்பதில் சிந்தனை யிருந்தால், அதி விரையம் ஆகும் பிராணன் சிறிது சிறிதாக அடங்கும். அதன்பின், நம் மனப்படி அது நடக்கும். இனறேல், அது தன்போக்கில் இழுததுச சென்று அதல சுதல பாதாளததில் அநியாயமாகத் தள்ளிவிடும். வசப்படுத்தற்கு உரிய அக்குதிரைக்குச சுவாசி என்று பெயர். சுவாசி என்பது முதற் குறைந்து, வாசி என்று வழங்குகின்றது.

பிராணனை இபபடிக் கட்டுப் படுத்திஞல், கால தத்துவம் நமக்குக் கட்டுப்படும்; காயம் வஜ்ர காயம் ஆகும் என்பது கருத்து.

இந்தப் பிராண ஆயாம சாதனையில், படமெடுததுக் குண்டலினிப் பாம்பு, அசைந்து ஒசிந்து ஆட ஆரம்பிக்கும். அதைப் பிடிக்க, விந்து தத்துவ மயில்ஜோதி விரையும். அவ் வெளியை, தூய ஞானத்தால் துதிதது வழிபட, அதன் பயனுக, நிலத்திலும் நீரிலும், இததேக நிழல் வீழாது. தஞ்சாவூர் கோபுர நிழல் தரையில் படுவது இலலை அதைக் கட்டி

ஈனமிலார்; மான இயல்பறிவார்; ஞான
தானம்செய் கின்றூர்தாள் சாரஅருள் எந்தாயே!

முடித்த சிற்பியும், சிறக்க இச் சாதனையைச் செய்தவர். அந்த நினைவொடுதான், அவர் அக்கோபுரத்தை அமைத்தார்.

அவரை எண்ணி, எப்போதும் சித்தாசனம் இட்டு இரு!

அரவானதைப் பிடிக்க ஆடும் மயிலைத்
தரவாளால் தூவித் தரிக்க—விரவுமரும்
தஞ்சாவூர் கோபுரத்தைத் தானமைத்த ஆசாரி
நெஞ்சில் நினைந்(து) எக்காலும் நில்.

[அரவு - குண்டலினி. மயில் - விந்து தத்துவ விளக்கம். தரம் (ஞானத்) தகுதி. வாள் - ஒளி; உரிச்சொல். தூவி - அர்ச்சித்து. தரிக்க - தாங்க.]

கூர்மையும் ஒளியும் மிகுந்த ஞானம், உரமான வாள் என்று உருவகிக்கப் பெறும். "தந்தைக்கு முன்னம் தனி ஞான வாள் ஒன்று சாதித்தருள்—கந்தசுவாமி" என்று, அலங்காரமாக அருணை முனிவரும் இதை அறிவித்துள்ளர்.

அந்த ஞானமலர் சாத்தி, தரிசன அனுபவத்தைத் தாங்க நேர்ந்தால், ஆ! அதை எண்ணும் போதே இதயம் பெரிதும் நெகிழ்கிறதே!

யார் அந்தச் சிற்பி? அவர் வரலாறு யாது? என்கிருயா! என்ன சிறு பிள்ளைத் தனமான கேள்வி யிது!

அவர் முத்தி சொரூபம் ஆனவர். வளமான ஆகாய வடிவினர். இயலும் நம் சிந்தனைக்கு எட்டாதவர். அதனால், தட்டான் எனும் தரமுயர்ந்த பெயராளர்.

உள்ள இடம் தெரிந்தால், அவரை ஓடிப் பிடிக்கலாம். அவர்தான் நமக்கு அகப்படவே மாட்டாரே! நாம் நாடித் தேடும் எப்பதியும், அவர் சொந்தப் பதி. அவரிடம் பல ஞானிகள் அடைக்கலமாயுளர்.

மயலினரைச் சார்ந்து மதிபிறழா வண்ணம்,
இயலிசையால், நின்னை இறைஞ்சஅருள் செய்யாயே!

" வீடுமவன் ஆகும்; வெளியும் அவனாகும்;
ஓடப் பிடிக்கஅவன் ஒட்டானே—தேடும்
பதிக்கும் அவன; பாசப் பற்றறுப்பார் தங்கள்
கெதிக்குமவன் ஆகுமே கேள "

(வீடு - முத்தி. வெளி - அம்பலம். பதி - ஊர். கெதி - அடைக்கல நிலயம்.]

வலியன் உவமை.

ஒரு மரம். அதில் கூடுகட்டி வாழ்கிறது கரிக்குருவி. வலியன என்னும் பெயர் அதற்கு வாய்த்துளது. உத்தம அதன் குரல், மிருத்யுஞ்ஜய மந்திர நாதமாக ஒலிக்கும். அது, கிளை கிளையாய்த் தாவி, உச்சிக் கிளையில் தங்கி உவகையுறும். இது நித்யமும் நாம் காணும் நிலை.

இந்த உடலம் ஒரு மரம். குண்டலினிக் குருவி இதனில் கூடுகட்டி வசிக்கிறது. மூலக் கனல் மூள மூள, குருவி ஆதாரங்களைத் தாவித் தாவி, அந்தரம் நோக்கி எழுகிறது. அக்கனல், ஆயிர இதழ்க் கமலமான சகஸ்ராரத்தை அணு கியதும், நலமான அகக்குருவி, விண்ணில் எழுந்து நம்பன் அடியில் இன்பமுறும். அதன்பின் ஆன்மா, தன்னை யறியும். இதுவே காய சித்தியாகும் தூய வழி.

" கூட்டில் கரிக்குருவி கொம்பில் குதித்தேறி
மூட்டிவிட காலை முடக்கியே—ஆட்டியதோர்
சக்கரமு மேஎய்தும், தன்னையும் தானறிவன;
இக்கிரக சித்தி யிது."

[கூடு - கூண்டு, கொம்பு - ஆதாரக் கிளைகள். மூட்டிவிட - மூலக் கனலை மூளவிக்க. காலை - சுவாசத்தை. முடக்கி - கும்பித்து. சக்கரம் - பிரமரந்திர சகஸ்ரார கமலம். இக்கிரகம் - இந்த (உடலாகிய) வீடு. சித்தி இது - கல்பமாகும் முறை இது.]

மரங்களில் குருவிகள் மேலேறக் குதிக்கும் போதே, கண்ட சாதகர், தம்செயலில் கவனம் செலுத்துவர்.

கையில் பொருளில்லை என்று கவலாமல்,
மெய்யில்மெய் அன்னநினை மேவச்செய் எந்தாயே!

தேங்காய் உவமை.

தென்னை மரம் ஒன்று. அதில் ஏராளமான தேங்காய்கள் இருக்கின்றன. விறு விறுத்த மனம், காயை விரும்புகிறது. உரியவன் இருக்க, எவரும் அவைகளைப் பறிக்க இயலுமா? மரத்திற்கு உரியவன் நட்பானுல், சுதந்திரமாகப் பறிக்கலாம்; அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

" தென்னை மரத்திலே தேங்காய் இருக்கிறதே
என்னமா நமக்குவந் தெய்துமோ—கனனமிடும்
கள்ளருட னேதோட்டக் காரனுமே ஒன்றுனுல்,
தள்ளுவார் இல்லையுனைத் தான் '

[தென்னை மரம் - தேகம். தேங்காய் - மதியமுத மண்டலம். கள்ளர் - பொறி புலன்களாகிய திருடர்கள். தோட்டக்காரன் ஆன்மா.]

முயல் உவமை.

சிறந்த சாதனை யிது சித்திக்கும்வரை, வியர்த்து அயர்ந்து விட்டு விடாதே. முன்னே நான அப்படித்தான் முயன்றேன். நாட்டு முயலுக்கு நாலு கால் எனபார்கள். என் முயல் (விற்கோ இடை, பிங்கலை, சுழுமுனை என) மூனறு கால். நான்கு கால் சேர்த்தால் ஒரு முழு எண். மூண்டு, வெற்றி கருதி முயன்ருல், கால் எனும் பிராணனும் கட்டுப் படும். அப்போதுதான் இன்ப ஞான ஆகாயத்தை எய்தலாம். தெரி கிறதா!

" நாட்டு முயலுக்கு நாலுகால்; நான்பிடித்த
மோட்டு முயலுக்கு மூன்றேகால்—மோட்டுமுயல்
முக்கால் முயலும்; முழுமுயலே ஆனக்கால்
அக்கால் வெளியாம் அது."

[மோட்டு முயல - பெருமுயற்சி. மூன்றே கால்-மூன்று காடிகள். முழு முயல் - முழு முயறசி. வெளி - சிதாகாயம்.]

காணிநிலம் இலலையென று கண்கலுழு கின்றஇந்த
மாநுடத்தில் நீக்கி,யெனைத் தாணிழலில் வையாயே!

பார் பார் பார் !

கண்டத்தையும் கபாலத்தையும் கண்டவர்கள் இல்லை. முன்புறமும் பினபுறமும் கண்ணாடிகளை வைத்தால், அவைகளின் துணையால், அந்த இரண்டு இடங்களையும் ஓரளவு அறியலாம். இந்த இரண்டிற்கும் நடு இடம் நெற்றி. நெற்றியில் உளது புருவ நடுஇடம். சால்பு தோனற, நாசிநுனி அங்கு சென்று சந்திததால், விண்மதி ஒனறு விளங்கலுறும். அத்திங்கள், வளர்தலும் தளர்தலும் வையகததில் இல்லை. முக்காலத்தும் குளிர்ந்த அதன் ஒளியைக் கண்டவர்களே ஞானம் கொண்டவர்கள்.

"கண்டத்தின் மேலாக கபாலத்தின் கீழாகத்
துண்டத்தின் மேலாய்த் துலங்குதே— மண்டபத்தில்
வட்டமதி தானும் வயசு கழியாது
அட்டமா சித்தும் அது".

[துண்டம் - நாசி நுனி.]

அணிமா மகிமா முதலிய எண் வகை சித்திகளும் இதன் வழியில் எய்தும். இளமையர், இச்சாதனையை இப்போதே துவக்கலாம். முதுமையர் தொட்டு வைத்தால், அடுத்த பிறப்பிலேனும் அந்தச் சாதனை, இயல்பாக ஒட்டி வரும் என்று ஓதுகின்றார் கொங்கணர்.

வாய் திறக்கலாமா ?

அனுபவிகள் அகமகிழ்வதன்றி, வாய்ப்பறை யறைய மாட்டார்கள். காலனை வென்றேம் ; கடு நரகம் தீர்ந்தோம் ; இப்படி இறுமாந்து இருப்பது அவர்கள் இயல்பு.

அறிந்தது சிற்றெல்லை ; பேசுவது பேரெல்லை. இதற்குத் தான் வாயாடல் எனற பெயர் வாய்த்துளது. குறை குடம் கூத்தாடும் ; அதுபோல, சில பாடல்களை மனனம் பண்ணிய

உளளம் கருதி உழன்று முயலாமல்,
கள்ளமனம் கொணடேற்குக், கண்யநெறி காட்டுதியோ !

அளவைக் கொண்டு, அனுபவியாத செய்திகளை அறிந்தது போல் பேசுவது ஆகுமா?

"விண்டவனும் கண்டிலான்; மேலாம் பதத்திருந்து
கண்டவனும் விண்டதனைக் காணேனே—துண்ட
மதியிலுறும் மேல்லூர வட்டமாம் மண்டபமோ
துதிசெய் தவன்ஆனேன் சொல்".

புருவ நடுவில் மதித தீபம்; அனுபவ ஞானிகள், சாதகர்க்கு அறிவித்த சமிக்ஞை யிது. மதியிருந்த மண்டபம் போல் தன்னை மதித்துக் கொண்டு, ஏட்டளவில் கற்றவர்கள் விண்டதெல்லாம் கண்டதல்ல.

அனுபவ முழுமையர், 'பேசா அனுபூதி பிறந்ததுவே' என்று மோனம் எய்துவர்.

அகக்கண்ணர் ஆன அவர்களது ஆநந்த மனோலயத்தின் "சுகந்தைச் சொல் என்றால், சொல்லுமாறு எங்ஙனே?" உத்தமர்கட்குத் தெளிவு உதிக்க, சூட்சும தரிசனம், திருமந்திர ஞானம், மெய்ஞ்ஞானம், சுத்த ஞானம், உற்பததி ஞானம், ஞான வெண்பா, ஞான சைதன்யம் முதலிய நூற்களின் மூலம், தமது சாதனை முறைகளையும், பெற்ற பேற்றையும் குறிப்பாகப் பல இடங்களில் கூறுகின்றார் கொங்கணர்

அவர் அறிவித்த முறைகளைப் பயின்ற சாதகர்கள் பலர்; சாதகர்களைப் பின்பற்றிய சாதகரும் உளர். அவர்களுள் ஒருவர், கொங்கணர் கருத்தை, கும்கும் என்று தாளமிட்டுக் கும்மியாகப் பாடுகிறார். பாடிய அந்நூலுக்கு, கொங்கணர் கும்மி யென்றே பேரும் இட்டுளார். அந்நூலின் அரிய இரண்டொரு கருத்துக்களை, அடுத்த இதழில் ஒரு சிறிது ஆய்வம்.

வாழ்க சித்தர்கள் வழிமுறை.

ஓம்.

ஊக்கம் பிறந்துனனை ஊன்றி யுணர்கின்ற
நோக்கந்தா! வாக்குத்தா, நுண்பொருளே ஆனேனே!

BUOYANCY OF SPIRITUALITY

The story of the Ramayana speaks of more than one occasion when Sri Hanuman was commissioned to bring from the Himalayan regions, sacred hills of sanctified herbs of great medicinal power which can heal all wounds, wherever they may have been caused, and restore strength and health. The picture of Sri Anjaneya flying across the sky with a mountain uplifted in his hands, is a characteristic pose which has inspired many ardent devotees. By yogic practices, we have been told that a man can lift his body in mid-air by about a foot and a half. This practice has been known as *lambika yogam*. But the accomplishment of Sri Anjaneya is a marvel to explain and understand. What may be the message for the ordinary man in these incidents of the story? For, Ramayana is an epic of messages for a happy humanity.

The ship of thousands of tons of hardware floats over the surface of the ocean, if it can hold within itself sufficient space filled with air. The space that iron or steel holds, displaces water of sufficient quantity as to make the ship itself to float. A solid piece of iron cannot float, but finds its resting place underneath the water at the bottom of the sea. It is the shape and form that counts, and the carrying capacity of the ship also rests on the law of displacement. Untold weights are carried by the ships over the water. The buoyancy of water is even more wonderful than the weight of matter.

Even so, in the case of man, the weight of worldly cares sits very lightly on him who has shaped his mind in the reflection of God. The buoyancy of spiritualism is a very great asset. The great sages who have experimented on it have shown that there is no weight that can crush a man when his mind is filled with an atmosphere of true spirituality or bhakti. Ram, Ram, Ram were the names with which Sri Anjaneya filled the atmosphere of his mind which had abjured all worldly attractions of base matter caused by heavy desires. His light-loaded mind lifted and moved mountains of healing power across the sky in no time. Here is a great message. Fill your mind with the buoyancy of God-love and God-name. The world will no longer sit about you as a weight. You can carry the burdens of life through, with a light heart and accomplish great achievements. A light heart, made buoyant with the concentration on God and his mercy, will enable you to achieve all the purposes of life. Circumvent the weight of materialism within you, with the buoyancy of spirituality. Do not sink the weight of your body in the water of death. Fill the vessel of the body-material with the presence of the Lord spiritual. Learn to float over the ocean of life and enjoy the treasures of Ananda. Always remember matter sinks; but the spirit reigns supreme. The former stinks. The latter fills the world with its divine fragrance.

(5-8) —*Thiruppugal Mani*

அமிர்தவசனி பிரசுரங்கள்

54, பந்தர் தெரு, சென்னை-1.

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரையுடன்

அரிய அருள் நூல்கள்		ரூ.	பை.
கந்தரநுபூதி	(விரிவுரை)...	1	25
திருவகுப்பு (6 மட்டும்)	,, ...	1	50
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	,, ...	2	00
கந்தர் கலிவெண்பா	,, ...	2	00
திருக்கயிலாய ஞானவுலா	,, ...	2	00
விநாயகர் அகவல் (ஔவையார்)	,, ...	1	50
கோளறு பதிகம்	,, ...	0	40
சண்முக கவசம் (பாம்பனடிகள்)	,, ...	0	60
திருபபுகழ்மாலை (360 பாடல் மட்டும்).	...	1	25
கந்தக்கதம்பம் (பாடல்மட்டும்) 288 பக்கம்.	...	1	25

தபோவனப் பதிப்பக நூல்களும் அனுப்ப இயலும்.

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சிததிரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நானகு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுகககு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சநதாச செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை-1.

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடும்
நாட்டமே! நாட்டத்துள் நிறைந்த
வானமே! எனக்கு வந்துவந்து ஓங்கும்
மார்க்கமே! மருளர்தாம் அறியா
மோனமே! முதலே! முத்திநல் வித்தே!
முடிவிலா இன்பமே செய்யும்
தானமே! தவமே! நின்னைநான் நினைந்தேன்;
தமியனேன் தனைமறப் பதற்கே!

(தாயுமானவர்.)

No. 1506
ASOKA
நெ. 1506

Regd No. M. 5390 மார்கழி ீ (1964 அமிர்தவசனி 16-9)

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.
MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பிைனயில்

(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியா
தயை கூர்ந்து வருகிற விசுவாவசு வருஷ சந்தாத் தொகையை அனு
படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 8, Bunder Street, Madras-1